பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 10 வெள்ளிக்கிழமை (26.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily ஒளி :273

# புலிகளின் நிர்வாகப் பகுதியில் ஒப்பந்தம் குறித்த பேச்சுகள்?

## இலங்கையில் நடப்பதானால் சாத்தியமான ஒரே வழி அதுவே

கொழும்பு, ஓகஸ்ட் 26

**அரசு-புலிகள் இடையிலான பேச்சுகள் வெளிநாட்டில் இல்லாது இலங்கையிலேயே நடைபெறவேண்டும் என்று அரசு வலியுறுத்தி வரும் நிலையில், அப்பேச்சுகள் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் நடைபெறுவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன என்று அறியமுடிகிறது. இதுகுறித்து அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிகிறது.**

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சுகளை நடத்த அரசு - புலிகள் இரு தரப்புகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

எனினும், பேச்சுக்கான இடத்தைத் தெரிவு செய்வதில் இழுபறிநிலை தோன்றியுள்ளது. வெளி நாடொன்றில் - அனேகமாக நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் - பேச்சு நடத்தப்பட வேண் டும் என்று புலிகள் வலியுறுத்துகின்றனர். ஆனால், இலங்கையிலேயே பேச்சுகள் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசு பிடிவாதமாக இருக்கிறது.

இந்த விவகாரத்தால் பேச்சுகள் இழுபறி நிலையை அடைவதைக் கருத்திற் கொண்டும் -

போர்நிறுத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்துவதைக் கருத்தில்கொண்டும் -

இலங்கையில் பேச்சுகளை நடத்தும் விடயத்துக்குப் புலிகள் இணங்குவார்கள் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறிய வருகிறது.

எனினும், பேச்சுகளை இலங்கையில் நடப்பதானால் அவற்றை முகமாலை அல்லது ஓமந்தையில் உள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் நடத்த அரசு சமர்ப்பித்த யோசனை

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனியிலிருந்து 50 ஈழத்தமிழர் நாடு கடத்தல்!

கொழும்பு,ஓக.26

ஜேர்மனியில் புகலிடம் கோரி அங்கு தங்கியிருந்த 50 இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை மறுக்கப்பட்ட நிலையில் ஜேர்மன் அரசால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அனைவரும் ஆண்களாவர்.

விமானத்தில் இவர்கள் குழப்பத்தில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில் இவர்களுடன் ஜேர்மன் பொலீஸாரும் வந்திருந்தனர்.

கட்டுநாயக்கவில் வைத்து குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள், குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

## இலங்கையிலேயே பேச்சு அரசு அதில் திட்டவட்டம்

### சபை முதல்வர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.26

"புரிந்துணர்வு ஒப்பந்தம் அபாயகரமான கட்டத்தை நோக்கி நகர்வதைத் தடுக்கவே ஜனாதிபதி புலிகளைப் பேச்சு மேசைக்கு வருமாறு அழைப்புவிடுத்தார். பேச்சுகள் இலங்கையில் நடைபெறவேண்டும் என்பதே அரசின் உறுதியான நிலைப்பாடாகும். விரைவில் உரிய திகதியும் இடமும் அறிவிக்கப் படும்."

- இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார் சபை முதல்வரும், சுகாதாரத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா.

புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன வென்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்ன

(18ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளுக்கு புலிகளை வரவழைக்க சர்வதேச சமூகம் அழுத்தம் தரவேண்டும்

### அரசு உலகநாடுகளிடம் வலியுறுத்து

கொழும்பு, ஓக.26

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசுடன் உடனடிப் பேச்சுகளை நடத்துவதற்கு முன்வருமாறு விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச சமூகம் முழுமையான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதாரத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் எப்போது? உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று!

கொழும்பு, ஓக.26

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமா அடுத்த வருடமா என்ற சர்ச்சைக்கு உயர்நீதிமன்றம் இன்று முற்றுப்புள்ளி வைக்கவுள்ளது.

அதேசமயம், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு வேட்பு மனுக்களைக் கோருவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை தேவையானால் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் திகதியை அறிவிக்க தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி முன்னதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. ஓமல்பே சோபித தேரர், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் தம்மையும் இடையீட்டு

(18ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வாளர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

### புளொட் அமைப்பினதும் உறுப்பினராம் அவர்

வவுனியா, ஓக.26

புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ராஜரட்ணம் சிறிகாந்தன் (வயது -58) என்ற நபரே உயிரிழந்தவர் என்று பொலீஸார் கூறினர். அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் அவர்கள் கூறினர். உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

வவுனியாவில் இருந்து தென் கிழக்கே 4கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கோவில்

(18ஆம் பக்கம் பார்க்க)

### 'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்டதைக் கண்டித்து

## கொழும்பில் இன்று மாலை ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக.26

'சுடர் ஒளி' செய்தியாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், அரசியற் படுகொலைகளை நிறுத்துமாறு கோரியும் ஐந்து ஊடக அமைப்புக்கள் இணைந்து இன்றுமாலை 4 மணிக்கு கோட்டை ரயில் நிலையம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளன.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் என்பன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளன. (க)

## பேராசான் சிவராமலிங்கம் நேற்று இயற்கை எய்தினார்

யாழ்ப்பாணம்,ஓக.26



மூத்த கல்விமானும் நாடறிந்த பேராசானும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் சிறந்த சொற்பொழிவாளனுமாகிய கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை நேற்றுக் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 80.

கடந்தசில நாள்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த இவர், யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்றுப் பிற்பகலில் அங்கு அவர் உயிர்பிரிந்தது.

பல தலைமுறைகளால் அறியப்பட்ட பேராசானாக விளங்கியவர் சைவத்தமிழ் வித்தகர் சிவராமலிங்கம். சுமார் நாற்பது ஆண்டு கால ஆசிரியப்பணிமூலம் நன் மாணாக்கர் பலரை உருவாக்கியவர்.

அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள்.

புங்குடுதீவைச் சேர்ந்த பிரபல ஆயுள்வேத வைத்தியர் கணபதிப்பிள்ளையின் மகனாக 16.09.1925 இல் பிறந்தவர் சிவராமலிங்கம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## ரவைகள், கைக்குண்டுகள் மலையகத்தில் சிக்கின

பொகவந்தலாவை, ஓக.26

நோர்வூட், சென்ஜோன்டிலரி தோட்டப் பகுதியிலிருந்து பெருமளவு துப்பாக்கி ரவைகளும், கைக்குண்டுகளும் பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து நோர்வூட், சென்ஜோன்டிலரி ஆகிய தோட்டப் பகுதிகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸாரே இந்த ஆயுதங்களைக் கண்டுபிடித்தனர். நோர்வூட் - பொகவந்தலாவை பிரதான வீதியில் கியூ தோட்டத்துக்குச் செல்லும்

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஊடகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் கண்காணிப்பில் பத்திரிகையாளர் மன்றம்

## பத்திரிகையாளர்களின் மறியல் போரையடுத்து முடிவு

யாழ்ப்பாணம்,ஒக.26

வடக்கில் உள்ள ஊடகங்களின் கண்காணிப்பிலேயே பத்திரிகையாளர் மன்றம் அமைக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஊடக வளங்கள் பயிற்சி மையத்திற்கான டென்மார்க் பிரதிநிதி ஹென்றிக் குருனர்.

டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஊடக வளங்கள் பயிற்சி மையம் செயற்படுகிறது. இங்கு பத்திரிகையாளர் மன்றம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்தது.

அத்துடன் 4 அம்சக் கோரிக்கைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முன்வைத்து பதிலளிக்கும்படி அச்சங்கம் கேட்டிருந்தது. அதற்கு திருப்தியான பதில் கிடைக்காத நிலையில் பத்திரிகையாளர் சங்கத்தினர் நேற்று காலை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் வாசல் கதவுகளைக் மூடி மறியல் போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். மறியல் போரால் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பித்தன.

இதனையடுத்து பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள், பயிற்சி மையப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர்.

அதன் பின்னர் செய்தியாளர் மாநாடு நேற்று மாலை ஊடக வளங்கள் பயற்சி மையத்தில் இடம் பெற்றது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் தயாபரன் மற்றும் சபேசன் ஆகியோரும் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் சார்பில் இயக்குநர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பயிற்சி இணைப்பாளர் அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை, டென்மார்க் பிரதிநிதி ஹென்றிக் குருனர் ஆகியோரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது ஹென்றிக் குருனர் தெரிவித்ததாவது:-

வடக்கின் சகல ஊடக அமைப்புகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்ட பின்பே பத்திரிகையாளர் மன்றம் ஆரம்பிக்கப்படும். வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன.

எமது நிலைப்பாடும் அதுவாகவே உள்ளது. வடக்கில் உள்ள அனைத்து ஊடகங்களினதும் பிரநிதிகள் அடங்கிய இயக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர் மன்றத்தின் செயற்பாடுகளை அந்தக் குழு ஊடாக வளங்கள் பயிற்சி மையத்துடன் இணைந்து நிர்வகிக்கும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-7-9-86-173)

# சிவராமலிங்கம் மாஸ்டரின் கண்கள் உடனடியாக தானம்

யாழ்ப்பாணம்,ஒக.26

நேற்றுக் காலமான மூத்த கல்விமான் சிவராமலிங்கம் அவர்களின் கண்கள் இரண்டும் உடனடியாகவே தானம் செய்யப்பட்டன.

அவரது விருப்பத்துக்கிணங்க இரு கண்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தானமாக வழங்கப்பட்டன.

'சிவபூமி' கண்தான சபை மூலமாக இந்தக் கண் தானத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய சிகிச்சைப் பிரிவு வைத்தியர் செல்வி சரவணமுத்து சத்திரசிகிச்சையின் மூலம் சிவராமலிங்கத்தின் கண்களை அகற்றினார்.

பார்வை இழந்த ஒருவருக்கு இந்தக் கண்கள் பொருத்தப்படும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-12)

# 'கற்றல் வளம்' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.26

ஆசிரியர் து.துஷியந்தனின் 'கற்றல் வளம்'(இலங்கை கலை) ஒளி இறுவட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ச.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-204)

# மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக.26

வடமராட்சி தென்புலோலியூர் கணைப்பதி பைரவேஸ்வர சுவாமி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் நவோத்திர சகஸ்ர மகா சங்காபிசேகமும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. (3-203)

# தேர்த் திருவிழா

இணுவில்,ஒக.26

இணுவில்கிழக்கு , அண்ணமார் கிருஷ் ணர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் ஆலய அலங்காரத் திருவிழாவில் நாளை காலை பத்து மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நாளை இரவு 9 மணிக்கு உறியடி உற்சவமும் இடம்பெறவுள்ளன. (9)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஒக.26

நல்லூரான் தேரடியில் திருவாசகம் முற்றோதல் இன்று காலை 6.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் இந்த நிகழ்வை ஆரம்பித்துவைப்பார். (3-203)

# நூற்றாண்டு நிறைவுப்பெருவிழா

யாழ்ப்பாணம் ,ஒக.26

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவுப் பெருவிழாவும் மலர் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கல்லூரியின் சுப்பிரமணியம் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளன.

கல்லூரி முதல்வர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

விசேட உரையைத் தொடர்ந்து நூற்றாண்டு சிறப்புமலர் வெளியீடு இடம்பெறும். (எ-202- ரி)

# சட்டம்-ஒழுங்கு பேணல் குறித்து ஆணைக்குழுவினர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஒக.26

குடாநாட்டில் சட்டம் - ஒழுங்கைப் பேண எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட ஆணைக்குழுத் தலைவர் கலாநிதி லஷ்மன் மாராசிங்க யாழ். நீதிபதிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினரும் சமாதான ஆணைக்குழுவின் உறுப்பினரும் சமாதான செயலக உறுப்பினருமான நிரோஷா நிமலசூரியவும் இதில் பங்கேற்றார்.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

நீதிமன்றச் செயற்பாடுகள், சட்டம், ஒழுங்கு நிலை ஆகியன தொடர்பாகக் கேட்டறிந்த குழுவினர் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய சட்டத் திருத்தங்கள் குறித்தும் ஆராய்ந்தனர்.

இக்குழுவினர் குடாநாட்டில் பல தரப்பட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி தள நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்தனர். (ஒ-3)

# 'விடுதலைப் புலிகள்' இன்று வெளியீடு

கிளிநொச்சி,ஒக.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆடி - ஆவணி மாத இதழ் 'அவசரகாலச் சட்டம் பிரகடனம் தமிழர் தாயகத்தில் பதற்றம்?' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

'சிங்கள அரசின் பிண அரசியல்' என்ற ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு, க.வே.பாலகுமாரன் எழுதிய 'இன்னொரு ஏய்ப்பர் வருகிறார்', 'சிங்கள அரசிடமிருந்து அரசியல்தீர்வு கல்லில் நார் உரிக்கும் முயற்சி', சுனாமி நிவாரணப் பணி பொதுக்கட்டமைப்பிற்கு வெளியே', போன்ற கட்டுரைகளுடன், கலாநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய 'வவுனியாத் தீர்மானமும் அது போன்ற பிற நிகழ்ச்சிகளும்' என்ற கட்டுரையையும் கொண்டுள்ளது.

'தமிழீழ மண்ணில் சூழல் நல்லாட்சிக்கெனவோர் ஆணையம்', இலங்கை இனப்பிரச்சினையின் போக்கும் இலங்கை நீதிமன்றங்களின் நோக்கும்', 'துணை இராணுவப் படைகள்: கேள்விக்குறியாக்கப்படும் சமாதானம்' போன்ற கட்டுரைகளுடன், விடுதலைப் புலிகள் மகளிர் படையணிகளின் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் 'வரலாற்றை வரையும் தூரிகைகள்' என்ற ஆக்கம், உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது. (ஒ)

# வலி.தென்மேற்கு பிரதேச கலை கலாசார விழா

வலி.தென்மேற்கு,ஒக.26

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் வருடாந்த கலை கலாசார விழா நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளைய நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அரங்கில் உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் ஆரம்பமாகும். விழாவில் பிரதம அதிதியாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி கலந்துகொள்வார்.

இவ்விழாவில் சிந்து நடைக் கூத்து, நாட்டுக் கூத்து, இசை நடனம், நாட்டார் பாடல், நாடகம், நடனம் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார்.

(எ-135)

# ஊடகவியலாளர் தாக்கப்படுவது காட்டுமிராண்டித்தனமான செயல்

## யாழ். வணிகர் கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக.26

உண்மையான பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர் தாக்கப்படுவது காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

சுடர் ஒளி செய்தியாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பு வருமாறு:-

ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டம் தொடர்பாகச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர் செவ்வாய்க்கிழமையன்று தாக்கப்பட்டதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக அறியாத தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அப்போது துவேசமாகப் பத்திரிகைகளில் எழுதி வந்த போதும் அவர்கள் சமாதான ஒப்பந்தத்தின் பின்பும் தற்போதும் ஏ-9 பாதை ஊடாக இவ்விடம் வந்து செய்திகள் சேகரித்து தமது பத்திரிகைகளில் தென்னிலங்கை மக்களுக்கு, எமக்கு சாதகமாகவும் பாதகமாகவும் செய்திகளை எழுதி வந்தனர்.

அவர்கள் இவ்விடம் வந்து செய்திகளைச் சேகரித்த போது அவர்களுக்கு எதிராக எமது மக்கள் செயற்படாது அவர்களுக்கு தேவையான விவரங்களை வழங்கி உதவி புரிந்துள்ளனர்.

தற்போது தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவரும் ஊடகவியலாளர் தாக்கப்படுவது ஒரு காட்டுமிராண்டித்தனம் எனவும், வெட்கப்படவேண்டிய விடயமெனவும் நாம் குறிப்பிடுவதுடன் அதனை வன்மையாகவும் கண்டிக்கின்றோம்.

செவ்வாய்க்கிழமையன்று செய்தி சேகரிக்கச் சென்ற போது சுடர் ஒளி ஊடகவியலாளர் ஒருவர் ஒரு பேரினவாதக் கட்சியினால் படுமோசமாகத் தாக்கப்பட்டு அவரின் பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டு இனத்துவேசமாக நடந்துகொண்டதும் -

தமிழ் மக்களைப் புண்படுத்துவதுடன் இன ஐக்கியத்தை வளர்த்து சமாதானச் சூழ்நிலையை உருவாக்கவும் ஓர் முட்டுக்கட்டையாக அமையும்.

இனமத ரீதியாக இனத் துவேசமான முறையில் செயற்படும் அரசியல் கட்சிகளைத் தென்னிலங்கை மக்கள் கடந்த காலங்களில் அரசியல் அரங்கில் இருந்து தூக்கி எறிந்துள்ளார்கள். அதேபோன்று தற்போது இன ரீதியாகச் செயற்படும் கட்சிகளை தென்னிலங்கை மக்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்து அவர்களை அரசியல் அரங்கில் இருந்து அகற்றவேண்டும் அப்படிச் செய்யாதவிடத்து எதிர்காலத்தில் இலங்கை இரண்டு நாடுகளாக அல்லது இன மத ரீதியாக பிளவுபடுமேயன்றி இன ஒற்றுமையை வளர்க்கமுடியாது என்று அதில் உள்ளது. (எ)

# ஜே.வி.பியின் வெறித்தனம் நிரூபணம்

'சுடர் ஒளி' பத்திரிகை ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் ஜே.வி.பியின் வெறித்தனத்தை நிரூபித்துள்ளது.

- இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக்கட்சி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஊடகவியலாளர் பிரேமச்சந்திரன் யதுர்ஷன் மீது ஜே.வி.பியினர் தாக்குதல் மேற்கொண்டதற்கு அவர் தமிழர் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்பட்டமையே காரணம் என்பது தெளிவாகியுள்ளது. தமது இனத்தின் உரிமைகளுக்காகவும், வெளிப்பாடுகளுக்காகவும் குரல் எழுப்பும் எந்தவொரு தமிழர் மீதும் தாக்குதல் மேற்கொள்ள ஜே.வி.பி. ஆர்ப்பாட்டக்காரர்கள் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதை இந்நிலைப்பாடு சந்தேகமற நிரூபித்துள்ளது.

'சுடர் ஒளி' பத்திரிகையின் பணிமனை மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவமும் மிக அண்மையிலேயே நிகழ்ந்துள்ளது. அந்நிலையில் ஜே.வி.பி. இந்த நீசத்தனமான தாக்குதலுக்குப் பொறுப்பேற்பதினின்றும் நழுவி அச்சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் 'சுடர் ஒளி' என்பது புலிகள் அமைப்பின் பத்திரிகையென்றும் அப்பத்திரிகையின் செயற்பாடுகள் கூட சந்தேகத்திற்கிடமானவை எனவும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் இக்கூற்று 'சுடர் ஒளி' பத்திரிகைப் பணிமனை மூடிச் சீலிடப்பட்டு அங்கு பணிபுரியும் சகல ஊடகவியலாளர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. அவ்விதம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் வெகு விரைவில் அப்பத்திரிகை மீது தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற வெறித்தனமான அபாய அறிவிப்பொன்றும் இதில் பொதிந்திருப்பதை எவராலும் உணரமுடியும்.

# ஜனநாயக விரோத நடவடிக்கை

'உதயன்' - 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் பணிமனை மீதான இக்கைக்குண்டுத் தாக்குதல், ஜே.வி.பி. ஆர்ப்பாட்டத்தின்போது 'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்டமை ஆகியவை ஜனநாயக விரோத ஊடக சுதந்திர விரோத வெறித்தனமான நடவடிக்கைகளாகும்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி கண்டித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வாரம் 'சுடர் ஒளி' - 'உதயன்' பத்திரிகைகளின் வெள்ளவத்தைப் பணிமனை கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியமையும் அதனைத் தொடர்ந்து சில தினங்களுக்கு முன்பு 'சுடர் ஒளி' ஊடகவியலாளர் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டத்தில் தாக்கப்பட்டமையும் ஜனநாயக விரோத ஊடக சுதந்திர விரோத பேரினவாத வெறித்தன நடவடிக்கைகளேயாகும். இது தமிழ் ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்திப் பணிய வைக்கும் அராஜக முயற்சி மட்டுமன்றி அதனூடாக முழுத் தமிழ் மக்களையும் மிரட்டுவதுமாகும். இவ்விரு சம்பவங்களையும் எமது புதிய ஜனநாயகக் கட்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்விரு வெறித்தன நடவடிக்கைகள் பற்றியும் அரசாங்கம் உரிய விசாரணைகளையும் தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் எனவும் வற்புறுத்துகின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சிங்கள, தமிழ் மக்களுக்கிடையிலான பதற்றம் இனக்குரோதம் இனவெறி என்பனவற்றுக்குத் தீ மூட்டி அவற்றின் ஊடே தமது வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்ள ஜே.வி.பி. முயற்சிக்கின்ற போக்கையே காணமுடிகின்றது. இவ்வாறான ஜே.வி.பியின் பேரினவாத வெறித்தன நடவடிக்கைகளுக்கு சிங்கள மக்கள் பலியாகிப்போகக் கூடாது என்பதையும் எமது புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டுகின்றது.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒப்பந்தம் குறித்த பேச்சு எங்கே?

போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்துவது குறித்து, அந்த ஒப்பந்தத்தின் பங்காளிகள் தரப்பு இரண்டும் நேருக்குநேர் சந்தித்துப் பேசுவதற்கான முன்முயற்சிகள் கடந்த ஒரு சில நாள்களாக நடைபெற்று வருகின்றன.

இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பாக நோர்வே அரசிடம் வலியுறுத்தினார். அந்த அழைப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டனர்.

முறிந்துபோகும் புள்ளியை நெருங்கிக் கொண்டிருந்த ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கு, உத்தேச பேச்சு உதவும். ஆகையால், இது ஓர் ஆக்கபூர்வமான முயற்சி என்று சமாதான விரும்பிகள் எண்ணினர்; அதனை வரவேற்றனர். செயல்வடிவம் பெறவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமாகவும் உள்ளனர்.

ஆனால், தென்னிலங்கையில் உள்ள பேரினவாதச் சக்திகள் இந்த முயற்சியை எதிர்த்தன; ஆட்சேபித்தன. விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால் அவர்களைத் தடைசெய்துவிட்டே அதனை நடத்தவேண்டும் என்று கூறுமளவுக்கு அவர்கள் அர்த்தமற்ற முறையில் கருத்துத் தெரிவித்துவருகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் உத்தேச பேச்சுகளை அரசு நடத்தக்கூடாது என்று கோரி தலைநகர் கொழும்பில் ஜே.வி.பியினர் ஆர்ப்பட்டம் செய்யும் அளவுக்கு நெருப்பாய்க் கொதிக்கிறார்கள்.

அவர்களுக்குப் பக்கப்பாட்டுப் பாடும் அணிசெய் கலைஞர்களாக மாறியுள்ள ஜாதிக ஹெல உறுமயவினரோ, விடுதலைப் புலிகளை ஒடுக்கவேண்டும் என்ற வன்மத்துடன் செயற்படுகின்றனர். விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்த உத்தேசித்திருக்கும் பேச்சு அவர்கள் மேலும் படுகொலைகளைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் என்று புலம்புகிறார்கள்.

ஏனைய பேரினவாத சக்திகள் பேச்சுகள் நடத்தப்படும் பட்சத்தில், கருணா அணியை அகற்றவேண்டும் அல்லது அவர்களை நிராயுதபாணிகளாக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு உடன்படக்கூடாது என்று "ஆலோசனை" கூறுகின்றன.

இவற்றுக்கிடையில் -

பேரினவாதிகளின் இனவாதக் 'கூத்து'களுக்குச் சிகரம் வைத்தாற்போல, நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உத்தேசப் பேச்சுகளை நடத்தமுடியாது என்று தெரிவித்து அனுசரணையாளர்களின் ஆலோசனையை அரசு நிராகரித்துள்ளது.

உத்தேச பேச்சுகளை எந்த வெளிநாட்டிலும் நடத்துவதற்கு உடன்பாடு இல்லை என்று அரசு தெரிவித்துவிட்டது. போர்நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட பேச்சை நாட்டிலேயே நடத்தவேண்டும் என்பது அதன் நிலைப்பாடு.

அமைச்சர் கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச மட்டத்தில் அவப்பெயர் உண்டாகிவிட்டது. அதனைச் சரிசெய்வதற்காகவே அவர்கள் வெளிநாட்டில் பேச்சுகள் நடைபெறவேண்டும் என்பதில் அக்கறையாக உள்ளனர் என்பது அரசின் கருத்து.

அரசின் இந்தக் கருத்து, கதிர்காமரின் கொலையை விடுதலைப் புலிகளே செய்தனர் என்ற அதன் குற்றச்சாட்டை, மேன்மேலும் வலிமையாக்குவதற்கான ஓர் ஏற்பாடு. கதிர்காமர் கொலைசெய்யப்பட்டு 13 நாள்கள் கடந்துவிட்டன. அக்கொலையை விடுதலைப் புலிகள் தரப்புத்தான் செய்தது என்பதற்கான ஆதாரமோ, சாட்சியோ அரசு நடத்திவரும் விசாரணைகளில் இருந்து வெளிப்படவில்லை. திட்டவட்டமான, உறுதியான அடிப்படை எதுவும் புலனாய்வாளர்களாலோ அல்லது விசாரணையாளர்களாலோ கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆயினும் -

விடுதலைப் புலிகளே செய்தார்கள் என்று ஏற்கனவே செய்யப்பட்ட முடிவை வைத்துக்கொண்டு ஊகிக்கப்படும் தகவல்களே வெளியிடப்பட்டுவருகின்றன. அதனை அப்படிச் செய்தார்கள், இதனையும் அவ்வாறே செய்திருப்பார்கள் என்ற பாணியிலேயே அவை வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய உருவாக்கல்களைக் கூட்டிச் சேர்த்தே விடுதலைப் புலிகள் மீது கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதன் விளைவே விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அவப்பெயர்.

இந்தப் பின்னணியை நோக்கும்போது, போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்த உத்தேச பேச்சு உள்நாட்டிலேயே நடைபெறவேண்டும் என்ற அரசின் விடாப்பிடி, பேச்சுகளை நடத்துவதில் அரசுக்கு உள்ள விசுவாசத்தையும் விருப்பத்தையும் சந்தேகிக்க வைக்கிறது.

எப்படியோ! அவப்பெயர், சர்வதேச அபிப்பிராயம் என்ற தூசிகளைத் தமது பக்கத்தில் அணுகவிடாது விடுதலைப் புலிகள் பெருந்தன்மையாகச் செயற்பட முன்வந்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவித்தன.

அரசு விரும்புவது போலவே இலங்கையிலேயே உத்தேச பேச்சுகளை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவிக்கக்கூடும் என்ற தகவல் இப்பத்தியை எழுதும் போது கிடைத்தது. போர்நிறுத்தம் முறியக்கூடாது என்பதில் அவர்களுக்கு உள்ள ஆர்வத்தை இந்த முடிவு பிரதிபலிப்பதாக அமையும்.

போர்நிறுத்தம் முறிந்து விடக்கூடாது; சமாதான நிலைக்கு ஊறு நேரக்கூடாது என்ற விரும்பம் கொண்டவர்களைத் திருப்தியுறவைக்கும் தகவல் இது.

# வவுனியாவில் போர்நிறுத்தச் சூழலை முறைப்படி கடைப்பிடிப்பதில் நெருக்கடி

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஞானம் எடுத்துரைப்பு

வவுனியா,ஓக.26

வவுனியா மாவட்டத்தில் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் என்ன நிலைமை காணப்பட்டதோ அதே நிலைமையே தற்போது மீண்டும் உருவாகியுள்ளது. இதேநிலை தொடருமானால் தொடர்ந்தும் போர்நிறுத்த நிலைமையினை முறையாகக் கடைப்பிடிப்பதில் பாரிய பிரச்சினை ஏற்படும்.

- இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெக்பூக் ஹெக்லேண்டுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.10 மணிமுதல் பிற்பகல் 2.15 மணிவரை வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்டப் போர்நிறுத்தக் காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை, நிர்வாகப் பொறுப்பாளர் ரமணன் மற்றும் வவுனியா மாவட்ட சமாதானச் செயலக இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில் - நேற்றுமுன்தினம் காலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அடங்கிய குழுவினர், இராணுவத்தினரைச் சந்தித்தனர். இந்த விடயமும் அங்கு கலந்துரையாடப்பட்டது. வவுனியாவில் தற்போது இராணுவத்தினர் சாதாரண மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சுற்றி வளைப்புகளை ஏற்படுத்திக் கெடுபிடிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். இந்த நடவடிக்கையானது போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் வவுனியாவில் என்ன நிலைமை காணப்பட்டதோ அதே நிலையே தற்போதும் ஏற்பட்டுள்ளது - என்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-164)

*உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள*

# கொழும்புத்துறை தேவாலயங்கள் பலவும் சேதமடைந்த நிலையில்

கொழும்புத்துறை,ஓக.26

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கத்தோலிக்கத் தேவாலயங்கள் பலவும் சேதமடைந்து கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன என்று இப்பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எழிலூர் புனித வேளாங்கன்னி மாதா ஆலயம், வசந்தபுரம் புனிதயாகப்பர் ஆலயம், மணிப்புரி கத்தர் ஆலயம், உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலயம், பூம்புகார் புனித பிலிப்புளேரியார் ஆலயம், கிழக்கு அரியாலை புனிதவேளாங்கன்னி மாதா ஆலயம் என்பன இவ்வாறு பாதுகாப்பு வலயத்தினுள் முடக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து வருடங்களாகத் திருப்பலிகள் இன்றி இருக்கும் இந்த ஆலயங்களில் திருவிழாக்களையாவது மக்கள் சென்று கொண்டாடப் படையினர் அனுமதி வழங்கக்கூடாதா? என ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# உலக உணவுத் திட்ட உதவியுடன் துண்டி மயானம் புனரமைப்பு

கொழும்புத்துறை,ஓக.26

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் துண்டி மயானம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக சிரமதானம் மூலம் மயானப் பகுதி துப்புரவு செய்யப்பட்டு சில நிழல்மரங்கள், தென்னைகள் என்பன நடுகை செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உலர் உணவு ஊதிய வேலைத் திட்டத்தின்கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக துண்டி மயான அபிவிருத்திக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பணிகளில் இந்த மயானத்தைப் பயன்படுத்தும் கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வுப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களை இணைந்து செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த கட்டமாக மயான மடம், சடலங்களை எரியூட்டுவதற்கான மழைக்காப்புப் பந்தல் என்பனவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-30)

## உதயவாக்கு

ஒரு நல்ல நூல் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும். *-சுவாமி விவே கானந்தர்.*

## நாளை

ஆவணி 11
சனிக்கிழமை
27.08.2005
திதி: அட்டமி
பிற்பகல்: 02.03 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பின்னிரவு: 04.11 வரை
கிருஷ்ணா ஜெயந்தி
சுபநேரம்: 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35
(யாவும் பழைய நேரப்படி)

# 'என்புமச்சை' நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனின் சிகிச்சைக்கு உதவுங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.26

வெளிநாட்டில் அவசர மருத்துவ சிகிச்சைக்குட்படுத்தப்படவேண்டிய சிறுவன் ஒருவனுக்குச் சிகிச்சைக்கான பெருந்தொகை நிதியைச் சேகரிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் யாழ். மருத்துவபீட மாணவர்களும் இணைந்து இதற்கென நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதுதொடர்பாக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிளிநொச்சி, பூநகரி, மறவன்குறிச்சியைச் சேர்ந்த இராஜ்மோகன் ஜதுசன் வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த நான்கரை வயதுச் சிறுவன் என்புமச்சை, குருதிச் சோகை நோயினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளான். இவர் தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றான். இவனது உயிரைக்காக்க மிக அவசரமாக இந்தியாவில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



இவனுக்கு இந்தியாவில் மருத்துவ சிகிச்சைமேற்கொள்ள ரூபா இருபது லட்சம் தேவைப்படுகின்றது. கருணை உள்ளம் படைத்தவர்கள், உதவி செய்ய விரும்புபவர்கள் இச்சிறுவனது நிலையுணர்ந்து தங்கள் நிதி உதவியை யாழ். தேசிய சேமிப்பு வங்கியின் எமது கணக்கு இல. 1-0006-03-3943-1. இதற்குச் செலுத்துவதன் மூலம் அல்லது நல்லூர் முருகன் ஆலயத் தென்மேற்கு வீதியில் அமைந்துள்ள எமது உற்சவகால பணிமனையிலோ அல்லது 178, நாவலர் வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்திலோ பணத் தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுவதுடன் ஓர் உயிரைக் காப்பதற்கான உங்கள் பங்களிப்பை வழங்கும்படி மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

செவ்வரத்தை, குறோட்டன், பாம்ஸ், மினி எக்ஸ்சோறா, அரக்கெரியா, சைபிரஸ் றெசீனா, யெற்றோவா ஆகிய கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (39216)

உரும்பிராய் கிழக்கு, ஞானவைரவர் கோயில் வீதியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டுவதற்குரிய இரண்டு பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.த.ஜெயசிங்கம், No:8, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (39277)

Sony 2092 MODEL TELEVISION, SONY WM - GX 221 MODEL WALKMAN, LUMALA RACING BICYCLE, DVD HOME THEATOR SYSTEM என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: M.KISHO இல.32/16, PRESS ROAD, JAFFNA T.P.No: 0777575701. (39292)

## வீடு வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலையிலிருந்து சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் இல.6, சுப்பிரமணியம் அவனியூ, வைரவர் கோயில் லேன், கொட்டடியில் ஒரு வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: த.வரதராஜன். T.P.: 021 222 7813. (39253)

கொக்குவில் மேற்கு, பள்ளத்தடி லேனில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு வாடகைக்குண்டு. வீட்டை நன்கு பராமரிக்கக் கூடியவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 0773222727. (38992)

## காணி விற்பனைக்குண்டு

வண்/வடமேற்கு, பொன்னையா வீதியில் மானிப்பாய் றோட்டுக்குச் சுமாராக வீடு கட்டுவதற்கான 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரண்டு துண்டாகப் பகிர்ந்தும் கொடுக்கப்படும். நேரடி தொடர்பு: சு.திருஞானசம்பந்தர், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (39280)

## தவறிவிட்டது

விநாயகமூர்த்தி விமலானந்தன் என்பவரது தேசிய அ.அட்டை (581131232V), மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் என்பன 23.08.2005 இல் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொள்ளவும் அ.முத்துலிங்கம். T.P. 3130. (39258)

## வான் விற்பனைக்குண்டு

'கை ஏஸ்' றொயட்டா - செல் மொடல் 50XXXX தொடரிலக்கமுடைய வெள்ளை நிற வான் விற்பனைக்குண்டு. காலை 10.00 - 6.00 மணி வரை பார்வையிடலாம். 316, நாவலர் வீதி (உப தபால் நிலையம் அருகில்), ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (39234)

## கிணறுகளில் நீர்மட்டம் குறைகிறது

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் நீண்ட காலமாக மழை பெய்யாததாலும், வரட்சியாலும் கிணறுகளில் நீர் மட்டம் மிகவும் குறைந்து வருகின்றது. வயல் காணிகளுக்கும், தோட்டங்களுக்கும் நீர் பாய்ச்சுவதற்கு கிணறுகளில் நீர் பற்றக்குறையாக உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள குளங்களில் நீர் வற்றியுள்ளதால் கால்நடைகள் நீர் அருந்தமுடியாத நிலையும் நிலவி வருகின்றது. (எ-135)

## தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு A/L படித்த 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(39285)

## தேவை

வைத்திய நிலையத்தில் தங்கி நின்று நிர்வாகம் செய்யக்கூடிய, குடும்பப் பொறுப்புகள் இல்லாத பெண் ஒருவர் தேவை. நேரில் வரவும்.
சம்பந்தர் மொடேர்ண் கிளினிக்
8, இராமையாச் செட்டியார் வீதி
*(அமுல் கிறீம் ஹவுஸ் அருகே),*
யாழ்ப்பாணம்.
(392690)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. வைத்திருப்போர் தொடர்புகொள்ளவும்.
தொடர்: **வீனஸ் பாம்**
79/5A, பலாலி வீதி
(நல்லூர் AGA Office முன்பாக) திருநெல்வேலி.
T.P.:0712513721, 0777252478.
(39276)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்குச் சிம்காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.
**யாழ்- போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி
(றிறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.
(சி-44496)

## வீடு விற்பனைக்கு

பொற்பதி வீதி, செருக்கம்புல லேன், கொக்குவில் கிழக்கில் 2 பரப்புக் காணியுடன் 3 அறை, குசினி, ஹோல், Open விறாந்தை, தனிக்கிணற்றுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். K.செந்தில், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக). (39291)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை. (கந்தர்மடம்) நாவலர் வீதி, பிறவுண் வீதி ஆகிய இடங்கள் விரும்பத்தக்கவை. தொடர்பு: 0777-448666, 077- 6500040. (39240)

---

*தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மகோற்சவகால தற்காலிகக் கடை*

## ஏலங்கூறல்

(28.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க முன்றிலில் மேற்படி கடை ஏலங்கூறல் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தெல்லிப்பழை
**இந்து இளைஞர் சங்கம்.**
(சி-44779)(42-14-15-26)

---



## மதுரை மீனாட்சி அம்மன்

அருள்வாக்கும் ஜோதிடமும்



K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். [காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை]

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376)(54-34-18)

---

## கண்ணீர் அஞ்சலி

*யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி ஆசிரியை*
*திருமதி ற.பத்மலிங்கம்*
*கல்வி சாரா ஊழியர்*
*திரு. வி.பரராசசிங்கம்*
*ஆகியோரின் அன்புத் தந்தை*

### *கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்*

*அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

பாடசாலைச் சமூகம்,
யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி,
நெடுந்தீவு.
(39279)(32-14-15-26)

---

யாழ்ப்பாணத்திலும்! பருத்தித்துறையிலும்!

## MOON BEAUTY CARE இன்

பெண்களுக்கான அழகுக்கலை பயிற்சிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்: (03-09-2005) காலை 10 (மு.ப.)

Personal G ooming
(5 0R 4 weeks)

தங்கள் சரும, கேச அழகு பராமரிப்பைத் தாங்களே மேற்கொள்ளல்]

* Personal Skin & Hair Care
* Day & Evening Make up
* Nail Care, Manicure 4 Pedicure
* DIY hair Styles 4 blowdry
* Body Beautiful, diet & figure Control
* Fashion Sensc & Poise Saree drapes

அத்துடன் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் பிரபல்யமான மூலிகை Facial Dealux, Facial (Treatment முறை) பயிற்சி அளிக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தில்** → சனி, ஞாயிறுகளிலும்
**பருத்தித்துறையில்** → புதன்கிழமைகளிலும்
பயிற்சிகள் நடைபெறும்.

பயில விரும்புவோர் பதிவுகளைப் பின்வரும் முகவரியில் சனி, ஞாயிறு காலை 9.30 - 12.30 வரை மேற்கொள்ளலாம்:
*பதிவுக்கட்டணம் ரூ.250.00*

இல. 92 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
**(DCM Tuition Center முன் )**

வெளிநாடுகளில அழகுக்கலை பயிற்சி கருத்தரங்கில் பங்குகொள்பவரும் நடன ஆசிரியையும் Moon Beauty Care இயக்குநரும் ஆகிய

பயிற்சி வழங்குபவர்: திருமதி B. அகிலா {Dip.in Beauty Culture / Dip. in Dance / Visaranth in harthak}

பதிவுகளுக்கும் ஏனைய விவரங்களுக்கும்:
**0777 570138.**
(26.14.15)

---

## COMPUTER EXPRESS

**Institute of Information Technology**
*இல 15, சிராம்பியடி வீதி* (off Stanly Rd.)
Tele:- 0777 222422, 0773151647

*இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்*

### Computerized Accounting

***AccPac + Quick Books Pro + MYOB***

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

**Course Contents**

- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning

Course Fee :- 1400
Duration :- 4 Month

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

*ஆரம்பம்*
*27/08/2005* 9.30 AM
*28/08/2005*

Tally Accounting Package
*புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது*

---



## மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தானம்

*ஆவணி மாதம் 11 ஆம் நாள்*
*நாளை (27.08.2005) சனிக்கிழமை*
*முற்பகல் 11 மணி*

சித்தி புத்தி சமேத விக்கினேஸ்வர பெருமானுக்கு (1008) சங்காபிசேகமும்
சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானுக்கு (108) சங்காபிசேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபனாபிசேகமும் நடைபெறும்.
அன்னதானமும் நடைபெறும்
அடியார்கள் அனைவரும் வருகைதந்து விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

*மண்டைதீவு.* - **தேவஸ்தானத்தினர்.**
(39281)(26-14-15)

---

## கார் வாடகைக்கு (குளிரூட்டியது)

ஆங்கில இலக்கம் கொண்ட புத்தம் புதிய கார் வாடகைக்கு உண்டு



- திருமண வைபவங்கள்
- சுற்றுலாக்கள்
- விஷேட வைபவங்கள்

ஆகிய அனைத்துத் தேவைகளுக்கும் எம்மை நாடலாம்.

**தொடர்பு: 0777312690 2, 0777222180, 0777283595, 021 222 6634.**

முகவரி: **பாம்பீச் ரெஸ்ரோறன்ற்,**
49, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(39243)(26-14-15)

---



ௐ
*ஸ்ரீராம ஜெயம்*

## யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

### ஸ்ரீமத் பகவத் கீதா ஹோமம்
### ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி உற்சவம்
### (27.08.2005)

ஆவணி 10 ஆம் நாள் (26.08.2005)
வெள்ளிக்கிழமை மாலை 4 மணி
பூர்வாங்கக்கிரியைகள், யாக பூஜை,
ஸ்ரீமத் பகவத் கீதா பாராயணம்

ஆவணி 11 ஆம் நாள் (27.08.2005)
சனிக்கிழமை காலை 8 மணி யாகபூஜை,
புருஷ சூக்த ஹோமம், பூர்ணாகுதி
மாலை 4.00 மணி - யாகபூஜை, ஸ்ரீமத் பகவத் கீதா ஹோமம், மஹா பூர்ணாகுதி, திரவியாபிஷேகம், விசேட தீபாராதனை, சகஸ்ரநாம அர்ச்சனை, நள்ளிரவு 12 மணிக்கு ஜனன பூஜை, திருத்தாலாட்டு சுவாமி வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளல் கிருஷ்ண ஜயந்தி காயம் அடியார்களுக்கு வழங்கப்படும். *(விசேட புல்லாங்குழல் கச்சேரியும், பஜனையும் நடைபெறும்)*

ஆவணி 12 ஆம் நாள் (28.08.2005)
ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி வசந்தமண்டப பூஜை, உறியடி உற்சவம் நடைபெறும்.

நாட்டு நன்மை கருதி நடைபெறும் பகவத் கீதா ஹோமத்திலும் ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி உற்சவத்திலும் கலந்துகொள்ளுமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-44780)(26-14-15) - **ஆதீன மஹாசபை.**

# ஆழிப்பேரலை பாதித்த சிறார்களுக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உதவி

கரவெட்டி,ஓக.26

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உதவ முன்வந்தது.

இந்த உதவியில் முதல் கட்டமாக சிறுவர்களுக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துள்ளது.

இளையோர் செயற்பாட்டு நிறுவனம் இந்த உதவிகளை வழங்கும் நிகழ்வு ஒன்றை நடத்தியது.

இந்த நிகழ்வு கடந்த 22ஆம் திகதி வடமராட்சி ஆழிப்பேரலை அனர்த்த செயலகத்தில் நடைபெற்றது.

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் வி.கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில் வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பன், வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிலியன், வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், ஆழிப்பேரலை அனர்த்த செயலக நிர்வாக அலுவலர் எஸ்.சந்திரன் ஆகியோர் சிறு வர்களுக்கான வங்கிக்கணக்குப் புத்தகங்களை வழங்கினர். (3-70-203)

# திருமலை விளையாட்டு மைதானத்தில் வீரர்கள் பயிற்சிபெறமுடியாத நிலை

## இராணுவத்தின் கெடுபிடியே காரணம் எனக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஓக.26

திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் விளையாடப் படையினர் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர் என திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டப் பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு இராணுவம் கெடுபிடியாக இருக்கின்றது. வீரர்களை விசாரணைகள், உடற்பரிசோதனைகள் செய்வதுடன், பந்துகளை வெட்டிப் பார்க்கின்ற அநாகரிகச் செயல்களில் ஈடுபடுவதால், விளையாட்டு வீரர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு இராணுவத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அரச நிறுவனங்களில் பணிபுரிகின்ற, குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்




திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்ட இராணுவத்தால் தினமும் விளையாடுகின்ற வீரர்கள் மற்றும் வயது கூடியவர்களின் உடற் பயிற்சிகள் செய்யமுடியாமல் இருப்பதாகவும், இப்படிப்பட்ட நிலை நீடிக்குமானால், விளையாட்டு என்பது திருகோணமலை மாவட்டத்தில் கேள்விக்குறியாக மாறிவிடும்.

தின் அரச ஊழியர்களின் நாளாந்தப் பயிற்சிக் கடமைகள் கூடச் செய்ய முடியாத அளவிற்கு இராணுவத்தினர் மைதானத்தில் நிலைகொண்டிருப்பது, ஒட்டுமொத்த இனவாத நடவடிக்கையே. நாளடைவில் திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானம் இராணுவ முகாமாக மாறிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (3)



*தொல்புரம் மத்திய சக்தி முன்பள்ளியில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட க.லோகேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் சக்தி முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவர் க.கிருஷ்ண மூர்த்தி ஆசிரியரும் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சு.சுந்தரராஜக் குருக்கள், ஒய்வு பெற்ற தமிழ் ஆசிரியை திருமதி எஸ்.சுப்பிரமணியம், அ.மி.த.க.பாடசாலைஆசிரியை திருமதி பா. விஜயராணி, சக்தி முன்பள்ளி ஆசிரியை செல்வி சி. தவமலர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

*(படம்: தொல்புரம் செய்தியாளர்)*

## பருத்தித்துறையில் கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.26

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**நாளை**

* காலை 9 மணி - நவசக்தி வி.க. எதிர் நாவலர் வி.க.
* முற்பகல் 11 மணி - தவுத்தின் வி.க. எதிர் அண்ணா சிலையடி வி.க.
* மாலை 3 மணி - கழுகுகள் வி.க. எதிர் யங்கம்பன்ஸ் வி.க.

**நாளை மறுதினம்**

* மாலை 3.30 மணி- மைக்கல் வி.க. எதிர் கொம்மாந்துறை வி.க. (3-190)

## கைதடியில் நாளை சைக்கிள் ஓட்டப்போட்டி

கைதடி,ஓக.26

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பொன்விழாவையொட்டி கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது என்றும் -

தற்சமயம் மாற்றப்பட்டு நாளை இப்போட்டி நடைபெறும். என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3-75)

# ஸ்கந்தா ஸ்ரார் சுற்றுப்போட்டி

## கிறாஸ்கொப்பர்ஸ் 43 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.விளையாட்டுத்துறையின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அமரர் ஜெயசோதி துஷ்யந்தனின் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஓர் ஆட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. அணிக்கும் நியூ ஸ்ரார் வி.க. அணிக்கு இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

மயூரன், சறூன், ஜீவசங்கர், கோபிநாத், ரவிசாந் ஆகியோர் முறையே 36, 18, 16, 12, 06 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பாலமுரளி 3 விக்கெட்டுக்களையும் பகிதரன் 2 விக்கெட்டுக்களையும் சியாம் தர்சன், ராஜ்குமார் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் வி.க. அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

முரளி, தர்சன், பாலமுரளி முறையே 18, 15, 11 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ராஜகாந்தன் 4 விக்கெட்டுக்களையும திலீபன் 2 விக்கெட்டுக்களையும் சறூன், சிறிதரன், மயூரன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டுககளையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. வீரன் மயூரன் தெரிவானார். (3-190)

## கே.ஸி.ஸி.ஸி.அணி வென்றது

இந்தச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கே.ஸி.ஸி.ஸி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளூஸ்) வி.க.அணி மோதியதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

சங்கர், பிரதீபன், பிரகாஸ், ஐங்கரன், சசிகரன் முறையே 34, 32, 28, 32, 22 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கமல் 4 விக்கெட்டுக்களையும் பிரணவன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் (புளூஸ்) வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

சசிகரன், கமல், கஜிகரன், பிரணவன் முறையே 53, 14, 13, 05 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பிரகாஸ் 3 விக்கெட்டுக்களையும் சிற்சபேசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி கே.ஸி.ஸி.ஸி. வி.க.அணி 86 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக கே.ஸி.ஸி.ஸி வீரர் பிரகாஸ் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

## ஆறுவிக்கெட்டுக்களால் ஸ்கந்தா ஸ்ரார்வெற்றி

இந்தச் சுற்றுப்போட்டியில் யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் வி.க. அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஸ்கந்தா ஸ்ரார் வி.க. அணியை எதிர்த்து யூனியன்ஸ் வி.க அணி மோதியதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

நாகேசன், டினேஸ், சிறிதரன், பிரசாந்தன், சிறிமதன் ஆகியோர் முறையே 31, 22,20,16,13 ஓட்டங்களைத் தமதுஅணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

நிரேசன் 5 விக்கெட்டுக்களையும் ராஜ்குமார் 2 விக்கெட்டுக்களையும் குமாரரூபன், வரேந்திரன் தலாஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் வி.க.அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப்பெற்றது.

நிசாகரன் ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களையும் குமாரரூபன் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங்களையும் யசிதரன், சிவதரன், நிறோயன் முறையே 23, 31, 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நாகேசன் 2 விக்கெட்டுக்களையும் பிரசாந்தன், கலிஸ்ராஜ் முறையே தலாஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக ஸ்கந்தா ஸ்ரார் வீரர் நிரோயன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# 15 வயதுப் பிரிவினர் துடுப்பாட்டம்; சென். பற்றிக்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

வலி.வடக்கு,ஓக.26

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினருக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கால் இறுதியாட்டம் ஒன்றில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயமும் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அனைத்து விக்கெட்டையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

27 ஓட்டங்களை அஜந்தன் பெற்றுக்கொண்டார்.

ஜொனிபர், மனோஜ், கஜமுகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கேதீசன், லவதீசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 234 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்துள்ளது.

நவதீபன் 52, நிலோஜன் 48, கஜமுகன் 38 ஓட்டங்களைத் தமது அணிக்கான ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

இராஜ்குமார், பிரதீஸ், மேனன் ஆகியோர் முறையே 4, 3, 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

இதில் நிசாகர் 14 , இராஜ்குமார் 9 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மனோஜ் 3 விக்கெட்டுக்களையும் கேதீசன், கமில்டன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (3-86)

## நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், அமரர் ஜெயசோதி துஷ்யந்தனின் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* காலை 8.30 - வட்டுக்கோட்டை ஓல் கோல்ஸ் வி.க எதிர் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் வி.க.
* பிற்பகல் ஒரு மணி - மானிப் பாய் பரிஸ் வி.க. எதிர் யாழ். சென்றல் வி.க.

(3-190)



*இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உதவியுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்துவைத்து, அதற்கான புத்தகங்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.*

*நிகழ்வில் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் உரையாற்றுவதையும், வடமராட்சி கடற்புலிகளின் பொறுப்பாளர் அன்பழகன் வங்கிக் கணக்குப் புத்தகத்தைச் சிறுமி ஒருவருக்குக் கையளிப்பதையும், வடமராட்சி ஆழிப்பேரலை செயலக அலுவலர் எஸ்.சந்திரன் வங்கிக்கணக்குப் புத்தகத்தைச் சிறுவர் ஒருவரின் தந்தையிடம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)*

# மாமுனை மீனவருக்கு உபகரணங்கள்; நம்பிக்கை நிதியம் வழங்கியது

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மனிதநேய நம்பிக்கை நிதியம் படகுகளையும் கடற்றொழில் உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு மாமுனைப் பொது மண்டபத்தில் மாமுனைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.தங்கவேல் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாமுனைக் கிராமத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 30 கடற்றொழிலாளர்களுக்கு படகுகள், இயந்திரங்கள், வலைகள் உட்பட கடற்றொழில் உபகரணங்கள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.கைலாசபிள்ளை இவற்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் நிர்வாக உறுப்பினர் கை.அபிராமி, அமெரிக்காவில் வசிக்கும் கணனிப் பொறியியலாளர் வித்தியானந்தன், லண்டனில் வசிக்கும் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.விக்கினேஸ்வரன், தமிழீழ கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பணிப்பாளர் மோகன், வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்தப் பணிமனைப் பொறுப்பாளர் நிலவன், தமிழீழ நிதித்துறையைச் சேர்ந்த தாயகன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் கைலாசபிள்ளை உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

மாமுனைக் கிராமத்துக்கென பளையிலிருந்து ஒரு வீதியையும், கணனிக் கல்வி நிறுவனம் ஒன்றையும் எமது நிதியம் அமைத்துக்கொடுக்கவுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் மாமுனைக் கிராமத்துக்கு விஜயம் செய்து அங்கு ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்வையிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களில் மனித நேய நம்பிக்கை நிதியமும் ஒன்று. இந்த வருட ஆரம்பத்தில் நாம் உறுதியளித்தபடி இன்று மாமுனைக் கிராம மீனவர்களுக்கு இந்த உப கரணங்களை வழங்கியுள்ளோம். அத்துடன் மேலும் பல உதவிகளைச் செய்வதற்கும் நாம் தயாராக உள்ளோம்- என்றார். (8-70)

# பரீட்சைகளில் மாணவருக்கு அநீதியை தடுக்க மேற்பார்வைக்குழு அமைப்பு

## யாழ். கல்விப்பணிப்பாளர் உடனடி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.25

பொதுப் பரீட்சைகளில் மாணவர்களைத் தோற்றவிடாமல் தடுக்கப்படுவது தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து இது குறித்து மேற்பார்வை செய்வதற்காகக் குழு ஒன்றை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் நியமித்திருக்கிறார்.

யாழ். நகரில் உள்ள பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஒரே சமயத்தில் பல மாணவர்கள் பரீட்சை எழுதவிடாமல் தடுக்கப்பட்டனர் என்று கிடைத்த முறைப்பாடு பற்றி விசாரணை நடத்திய பின்னரே யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்.

அரசினால் நடத்தப்படுகின்ற பொதுப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு ஒவ்வொரு மாணவனுக்கும் உரிமையுண்டு. அதையும் மீறி பரீட்சைகளில் மாணவர்களைத் தோற்றவிடாமல் தடுக்கும் சம்பவங்கள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் வருகின்றன. இத்தகைய அநீதியைத் தடுப்பதற்காகவே ஐவர்கொண்ட இந்தக்குழு அமைக்கப்படுகிறது.

பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களைப் பாடசாலை அதிபர்கள் அனுப்பும்போது சகல மாணவர்களும் அதில் உள்ளடக்கப்படுகின்றனரா என்பதைக் கண்காணிப்பதுடன், இது தொடர்பாகத் தொடர்ச்சியான மேற்பார்வையிலும் இந்தக் குழு ஈடுபடும் - என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வித் தரத்தை அடிப்படையாக வைத்து அவர்களைப் பரீட்சைகளுக்குத் தோற்றவிடாது அதிபர்கள் தன்னிச்சையாகத் தடுத்துவிடும் சம்பவங்கள் இடம்பெற்றால் அதுபற்றித் தமக்கு அறியத்தருமாறு கல்விப்பணிப்பாளர் கேட்டிருக்கிறார். (ஐ-13)

# புளியங்கூடல் சந்தியில் மாதிரி விற்பனை நிலையம்

ஊர்காவற்றுறை,ஓக.26

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புளியங்கூடல் சந்தியில் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றை கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு மேற்படி விற்பனை நிலையத்தை வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்தின் ஊடாகப் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள், பல சரக்கு வகைகள், விவசாய உள்ளீடுகள் நியாய விலையில் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திறப்பு விழாவில் ஊர்காவற்றுறை அரசியல் துறைப்பொறுப்பாளர் நா. ஈழமாறன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூ.ச. சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-16)







யாழ். றோட்டறிக் கழகத்தின் விருதுவழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் 2003 - 2004, 2004 - 2005 ஆகிய இரு ஆண்டுகளிலும் மாவட்ட சிறந்த கழகமாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். நகர்மைய றோட்டறிக் கழகத்திற்கு 2003 - 2004ஆம் ஆண்டுக்கான விருதை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் வழங்குவதையும், 2004 - 2005ஆம் ஆண்டுக்கான விருதை றோட்டேறியன் பி.டி.ஜி. விஜயகுமாரன் வழங்குவதையும் படங்களில் காணலாம். (203

# செய்தியாளரை ஜே.வி.பியினர் தாக்கியமை ஜனநாயகத்திற்கு எதிரான அடாவடித்தனம்!

ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற தமிழ் ஊடகவியலாளர் படுமோசமாகத் தாக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்திற்கு எதிரான அடாவடித்தனமாகும்.

-'சுடர் ஒளி' பத்திரிகையாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒருவரைக் காரணம் இன்றி தாக்கவோ, சந்தேகமெனக் கூறி பொலீஸாரிடம் அவரைக் கையளிக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. ஊடகவியலாளர் தாக்கப்பட்டபோது அவருடைய புகைப்படக் கருவியும், அடையாள அட்டை உட்படப் பல்வேறு ஆவணங்களும் சேதமாக்கப்பட்டு அபகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மிலேச்சத்தனமான செயல்களுக்குக் காரணமானவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதே நியாயமானதாகும். அதைவிடுத்து, ஊடகவியலாளரைக் கைதுசெய்து வெளியேற்ற வேண்டும் என்று பொலீஸாரிடம் தெரிவித்திருப்பது சட்டத்தை ஜே.வி.பியினர் அவர்களுடைய கையில் எடுத்துக்கொண்டதையே காட்டுகின்றது.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டபோது இத்தகைய ஆபத்துகளுக்கு தமிழ்ச் சமூகம் முகம் கொடுக்கவேண்டிவரும் என்பதை மலையக மக்கள் முன்னணி எச்சரித்திருந்தது. இதே நிலை தொடர்ந்தால் இனவாதத்திற்காகவும், அரசியல் காரணங்களிற்காகவும், தனிப்பட்ட குரோதங்களுக்காகவும், வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் எதிர்காலத்தில் தமிழ்மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாவார்கள். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த சாதாரண பிரஜைகள் கூட பொலீஸ்காரர்களாக மாறிவிடுவார்கள். தமிழ்மக்கள் அனைவரும் அவர்களுக்கு பயந்து அடங்கி வாழவேண்டிய அவல நிலை ஏற்படும். (எ-க)

# மறைந்திருந்த ஜே.வி.பியின் சரியான முகம் தெரிகிறது

## -அஸ்வர் ஹாஜியார்

ஜே.பி.யினரின் ஆர்ப்பாட்டம் பற்றிய செய்தி சேகரிக்கையில் 'சுடர் ஒளி' இளம் பத்திரிகையாளர், ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டது மறைந்திருந்த அவர்களின் சரியான முகத்தைக் காட்டுகிறது. இச்செயலை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற விவகார முன்னாள் அமைச்சர் அஸ்வர் ஹாஜியார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலத்தில் ஜே.வி.பியினர் செய்த கொலைகள், அச்சுறுத்தல்கள் என்பனவற்றை மீண்டும் ஒருமுறை செய்ய முயன்றுள்ளனர். அவர்களின் நிகழ்வைச் செய்தியாக்கச் சென்ற 'சுடர் ஒளி' பத்திரிகையாளர் யதுர்ஷனை அவர்கள் தாக்கியுள்ளனர். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும்? ஊடகத்துறைக்கு என்ன நேரும்?

இது சிறுபிள்ளைத்தனமானது. வஞ்சகம் தீர்ப்பது என நினைத்துக்கொண்டு பத்திரிகையாளரைத் தாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.

இது போன்ற நிகழ்வுகள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இனியும் நடக்காது இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - எனத் தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர். (எ-க)

# பொலீஸாரின் அசட்டையே தாக்குதலுக்குக் காரணம்

## - கஜேந்திரன் எம்.பி.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் செய்திசேகரித்துக் கொண்டிருந்த 'சுடர் ஒளி' செய்தி நிறுவனத்தின் ஊடகவியலாளர் ஒருவர் ஜே.வி.பி. காடையர்களால் தாக்கப்பட்டதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.கஜேந்திரன். 'சுடர் ஒளி' செய்தியாளர் ஜே.வி.யினரால் தாக்கப்பட்டமை குறித்துக் கண்டனம் தெரிவித்து அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் இவ்வாறு தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகின்றபோதும், தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக ஸ்ரீலங்காப் பொலீஸார் உரிய விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்காது மறைமுகமாக ஆதரவு வழங்கிவருகின்றனர். இதனாலேயே இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பதவி வெறிகொண்டு அலையும் ஜே.வி.பியினருடைய தமிழ் விரோதச் செயற்பாடுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தும் பத்திரிகைகளில் 'சுடர் ஒளி' மிகமுக்கிய இடத்தில் இருக்கின்றது. இதனால் ஆத்திரங்கொண்டுள்ள அக்கட்சியின் இனவெறிபிடித்த தலைமைப்பீடத்தின் திட்டமிட்ட செயற்பாட்டினாலேயே இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது - என்றுள்ளது. (எ-க)

# முஸ்லிம் கட்சி கண்டனம்

'உதயன்' - 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் கிளைக் காரியாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமையும், அதன் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையும், அப்பட்டமான ஜனநாயக அத்துமீறல்களுக்கு இவ்வாறான செயல்கள் இந்த நாட்டில் எஞ்சியிருக்கும் கொஞ்ச நஞ்ச ஜனநாயகத்தையும் கேள்விக்குறிக்குள்ளாக்கியுள்ளன.

- இவ்வாறு தெரிவித்துள்ளது மௌலவிமாரின் அரசியல் கட்சியான ஐக்கிய முஸ்லிம் கட்சி.

கருத்தைக் கருத்தால் வெல்ல முடியுமே தவிர இத்தகைய அத்துமீறல்களால் ஊடகத்துறையின் சுதந்திரத்தை ஒருபோதும் கட்டுப்படுத்தமுடியாது எனவும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (எ-க)

# பிற்போக்குவாதச் சிந்தனை ஒருபோதும் வெற்றியடையாது

## முற்போக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்

பத்திரிகைக் காரியாலயங்களைத் தாக்குவதன் மூலம் தமது அபிலாஷைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என யாராவது கருதுவார்களேயானால் அது அவர்களின் பெரிய முட்டாள்தனமாகும்.

'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகை காரியாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்து இலங்கை முற்போக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்மூடித்தனமான - காட்டுமிராண்டித்தனங்களின் மூலமாக - ஊடகவியலாளர்களையும், ஊடக நிறுவனங்களையும் அடிபணிய வைத்துவிடலாம் என்ற பிற்போக்குவாதச் சிந்தனைகள் ஒருபோதும் வெற்றியடையப் போவதில்லை. இச்சிந்தனைக்கு யாரும் தீனி போடுவார்களாயின் அவர்களும் நின்று நிலைக்க முடியாது.

ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள், காரியாலயங்கள் மீதும் புரியப்படும் காடைத்தனங்கள் உடனடியாக அரசினால் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாவண்ணம் பாதுகாப்பதும் அரசின் கடமையாகும்.

'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகைக் காரியாலயம் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை எமது இலங்கை முற்போக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது என - அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

# நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 39ஆவது பீடாரோஹண விழா

சைவத்துக்கும் தமிழுக்கும் தனித்துவமான சேவையாற்றி தனக்கென ஒரு தனியிடம் வகுத்துள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 39ஆவது பீடாரோஹண விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

நல்லை ஆதீனத்தை ஸ்தாபித்துத் தம்மையே அதற்காக அர்ப்பணித்த மகான்தான் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

1966ஆம் ஆண்டு ஆவணி மாத கார்த்திகை நன்னாளில் இந்த ஆதீனம் ஸ்தாபிக்கப்பெற்று இன்று 39ஆவது ஆண்டை நிறைவுசெய்துள்ளது. இன்று நடைபெறும் பீடாரோஹண விழா ஆதீன முதல்வருக்கு அவரையே குருவாகக் கொண்டு சகல உபசாரங்களும் செய்து விசேட பூசை,தீபாராதனை நிகழ்த்தும் ஓர் உன்னத விழாவாகும்.

தொண்டுகள் பல செய்து அளப்பரிய சேவையாற்றியவர் நல்லைக் குருமணி அவர்கள். கதாப்பிரசங்க வல்லாளராகத் திகழ்ந்த அவர், ஆலயங்கள் தோறும் சென்று சமயப் பிரசங்கம் செய்து மக்களுக்கு சைவத்தின் அருமை பெருமைகளை எடுத்தியம்பினார்.

சைவசமயக் கோட்பாடுகளையும் சித்தாந்த சாஸ்திரத் தத்துவங்களையும் தமக்கேயுரிய பாணியில் சகல மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் சொற்பெருக்காற்றிய பெருமை இவரையே சாரும். பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலானவற்றையும் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் சமத்தராகக் காணப்பட்டார்.

ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களுக்கும் சென்று சமயப் பணியாற்றிய சுவாமிகள், இந்த நல்லை ஆதீனத்தையும் நிறுவி சைவத் தொண்டாற்றினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்[illegible]ன்றைய குருமுதல்வராக அ[illegible]பாழியும் திருமுருகத்தோடு, பார்ப்போர் மனத்தில் பக்தியை உண்டுபண்ணும் அருட்பொலிவோடு விளங்குகின்ற இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றி வருகின்றார்.

இன்று நடைபெறுகின்ற பீடாரோஹண விழாவில் குருமூர்த்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமானுக்கு விசேட அபிஷேகங்கள், பூசைகள், தீபாராதனை வழிபாடுகள் இடம்பெறும். [illegible]பாராயணம், தமிழ் அர்ச்சனை, திருமுறைப் பாராயணம் என்பன ஆகம விதிப்படி முறையாக நடைபெற்று அன்னதானமும் இடம்பெறும்.

சைவத்தின் மேன்மையைப் பாதுகாத்து அதன் புனிதத்தையும் மகிமையையும் பேணிவருகின்ற நல்லை ஆதீனம், சைவசமய பாட வகுப்பு, பாலர் வகுப்பு, சங்கீத வகுப்பு என்று தனது சேவையை விஸ்தரித்து அருந்தொண்டாற்றி வருகிறது.



இவ்வாதீனம் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அமைந்து வழிபடும் அடியார்களின் தீவினை களைந்து திருவருட்கடாட்சம் வழங்கும் தொல்லைவினை தீர்க்கும் கந்தப் பெருமானின் திருக்கோயிலின் மேற்கு வீதியிலே இருப்பது அதி விசேடமும் புனிதத்துவம் வாய்ந்ததுமாகும்.

## திருவரன்

நல்லை ஆதீன பீடாரோஹண விழாவில் பக்திபூர்வமாக நாமும் பங்குகொண்டு கந்தன் திருவீதியை வலம்வந்து ஞானப் பார்வை நல்கும் சுவாமிகளின் அருளாசி பெற்று வாழ்வில் சகல வளங்களும் பெற்று நல்வாழ்வு வாழ நாமே வழி சமைத்து எல்லாம்வல்ல இறையருளுக்குப் பாத்திரமாவோமாக. ✱

# துணை ஏதுமில்லாத மனம்




உலக வாழ்க்கையின் இறுதிப் படிகளை எட்டிப்பிடிக்கும் காலத்தில், நடந்து வந்த பாதையைத் திருப்பிப் பார்த்தால் எமக்கு எத்தனை உறவுகள். குழந்தைப் பருவத்தில் பெற்றோர், சகோதரர், பின் மனைவி அல்லது கணவன் அதன் பின் பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என்று பலர்.

ஆனால், சிந்தித்தால் எந்தத் துணையுமில்லாததொரு நிலையிலேதான் நாமிருக்கிறோமென்பது புரியும்.

நாம் மரணிக்கும் காலம்வரை கூட பல்வேறுபட்ட காரணங்களினாலே எம்முடன் துணைவர முடியாத நிலையிலேதான் நம் உறவினர்கள் உள்ளனர். நாமும் யாருக்கும் துணையாயிருக்க முடிவது இல்லை.

எந்த உறவோ, எந்தத் துணையோ எமக்கில்லை என்பது புரியும் போது,'மனம் பதைபதைக்கும் ஒரு பற்றுக் கோட்டிற்காக ஏங்கி நிற்கும்.

அப்போது இறைவனின் எண்ணம் துணைவருகிறது. அந்த மயில்வாகனனை மனம் அழைக்கின்றது. தாவிப் படருவதற்குப் பற்றுகோடாக ஒரு கொம்பும் கிடையாத தனித்த கொடிபோலவே துணையேதுமில்லாத மனம் தள்ளாடி வாடிப் பதை பதைக்கின்றது.

காவிக்கமலக் கழலுடன் சேர்த்
தெனைக் காத்தருளாய்
தூவிக்குலமயில் வாகனனே
துணையேது மின்றித்
தாவிப்படரக் கொழு கொம்பில்லாத்
தனிக்கொடி போல்
பாவித்தனி மனந்தள்ளாடி
வாடிப்பதைக்கின்றதே
(கந்தரலங்காரம்)

என்று நினைத்து இந்தவேளையிலே, தான் மனம் உருகுகிறது. கந்தனின் பாதகமலங்களைத் தேடிப் பற்றும் எண்ணம் பிறக்கின்றது. இன்றேனும் இந்த எண்ணம் வந்ததற்குக் கந்தனின் அருளன்றோ காரணமாகியது.

நன்றி: ஞானச்சுடர்

## நல்லூரில் இன்று இசை அர்ச்சனை

நல்லைக் கந்தன் ஆலயத்தில் கார்த்திகைத் திருவிழா தினமான இன்று சுவாமி வீதியுலா வந்த பின்னர் ஆலய உள்வீதியில் எட்டுத் திசைகளிலும் இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடி இசை அர்ச்சனை செய்யவுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள இசைக் கலைஞர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த ஏற்பாட்டு ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. ஆலய உள்வீதி முழுவதும் குத்து விளக்குகள் ஏற்றப்பட்டு, தீப ஒளிக்கு மத்தியில் சுவாமி வீதி உலா வருவதும் இசை அர்ச்சனை நடைபெறுவதும் கார்த்திகைத் திருவிழாவின் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகிறது.






## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா கந்தபுராண தொடர் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

இதில் இன்று வெள் ளிக்கிழமை தாரகன்வதம் என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

(ஓ-204)

✱✱✱

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் 17 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை தென்னிந்திய இடும்பாவனம் சகோதரர்களின் நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.

நாதஸ்வரம் என்.பிச்சையப்பா, இ.வி.இளையராஜா, தவில் என். ஆர்.எஸ்.ரவீந்திரன், கே.காண்டீபன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

(ஓ-204)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்

பதினேழாம் திருவிழா



## நல்லூரரான் திருவடி - 10



கதிரமலைக்கு நேராய் கடுகிச் செல்வோம்
நாமெல்லாம் வாரீர் சீராய் (கதிரமலை)
கரந்து மடமயில் வாநலனம் கிடநது நீ வர
நிரந்தரம் திருமந்திரம் இரந்திரத்தோதி -
கதிரமலை
வரம் தரும்வடிவேலவன் மலர்ந்த தாமரை மலரடி
நிரந்து அன்புடன் இருந்து நடந்து திருப்புகழ்
சந்தமுழங்கும் விளங்கும் (கதிரமலை)
செல்லப்பனைத் தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக்குற்றவன்
சீரார் கொழும்புத்துறையில் வசிப்பவன்
சொல்லும் கீதங்கள் எங்கும் நல்லன்பு சொல்லுங்கள்
துன்பம் வெல்லும் செல்லுங்கள் முன்னால்
(கதிரமலை)

*- யோகர் சுவாமிகள்.*

## கார்த்திகைச் செல்வா துயர் ஒழியச் சிரிப்பாய் !

ராகம்: யமுனாகல்யாணி

எடுப்பு
கார்த்திகை மாதர்கள்
கரங்களில் தவழ்ந்த
கண்மணியே என்செல்வமே முருகா
தொடுப்பு
தோத்திரம் பாடியுன்
திருவடி தொழுதேன்
திரும்பியே ஒருமுறை சிரித்தருள்வாயே!
(கார்த்திகை)
முடிப்பு
தாமரைத் தொட்டில்
அசைந்து தாலாட்ட
தாயவள் உமையாள்
பாலமு தூட்ட
மாமறை தேடிட
மால் மருகோனே
மாசிலா அடியவர்
மனங்களில் வளர்ந்தாய்
(கார்த்திகை)
அகந்தைகொள் சூரனை
அழித்திட உதித்தாய்
அல்லல்கள் தீர்த்திட
நல்லையில் வருவாய்
எல்லையில் எழிலே!
என்னுயிர்த் தேனே
இன்பமே என்துயர்
ஒழிந்திடச் சிரிப்பாய்!
(கார்த்திகை)

- நவாலியூர் நடேசன்

## ஒண்திரு வடிவே லானே!

வேதநல் லாகமங் களான
விமலனே குமர வேளே!
நாதனால் விந்து வாகி
நன்கலை முழது மான
பாதமு முடைய தேவே
பராபரை யணைத்த பாலா!
ஓதுமந் திரங்கள் தாங்கும்
ஒண்திரு வடிவே லானே!

- சி.சக்திகிரீவன்

## கார்த்திகை நாதனே! காத்திட வருக!

கார்த்திகை நாதா காத்திடவேண்டும்
காரியம் யாவும் நிறைவேற்றிட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திடவேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டுக் கேட்கிறோம்
ஈழவர் கோரிக்கை ஏற்றிடவேண்டும்
போற்றியே உன்னுடன் வாழ்ந்திட வேண்டும்
புதிய தீர்வது தமிழர்க்கு வேண்டும்

- மதுரகவி

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் எஞ்சிய பகுதியினரின் பெயர்களும் குலுக்கல் முறையில் தெரிவானோரில் ஒருபகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

கோ/ 5525 திருமதி. மனோன்மணிஅம்பாள் நாகேந்திரக்குருக்கள்
கோ/ 5530 திரு. நமசிவாயம் நல்லைநாதன்
கோ/ 5540 திருமதி. பூமணி துரையப்பா
கோ/ 5542 திருமதி. பரமேஸ்வரி கதிரேசபிள்ளை
கோ/ 5545 திரு. சுவாமிநாதர் பொன்னுத்துரை
கோ/ 5553 திருமதி. பொன்னம்மா இரத்தினராசா
கோ/ 5556 திரு. வேலாயுதம் பத்மநாதன்
கோ/ 5565 திருமதி. இராசம்மா இராசமுத்தையா
கோ/ 5568 திரு. கனகரட்ணம் லோகானந்தம்
கோ/ 5572 திரு. இராசரத்தினம் இரத்தினவேலு
கோ/ 5575 திரு. சின்னத்தம்பி சின்னத்துரை
கோ/ 5577 திரு. முருகேசு சிவசுப்பிரமணியம்
கோ/ 5582 திரு. தம்பு சின்னத்துரை
கோ/ 5597 திரு. தம்பையா சிவபாதம்
கோ/ 5601 திரு. சபாபதி தயாபரன்
கோ/ 5610 திரு. வீரசிங்கம் சிவானந்தம்
கோ/ 5625 திருமதி. திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை
கோ/ 5628 திரு. வேலுப்பிள்ளை தருமலிங்கம்
கோ/ 5631 திரு. தம்பையா தியாகராசா
கோ/ 5650 திருமதி. யோகேஸ்வரி நவரட்ணம்
கோ/ 5653 திரு. கவுரியேல் அருளப்பு
கோ/ 5655 திரு. தமியாம்பிள்ளை அருள்பிரகாசம்
கோ/ 5666 திரு. வைரவப்பிள்ளை கதிரவேலு
கோ/ 5671 திருமதி. கனகம்மா செல்லர்
கோ/ 5682 திரு. தமியாபிள்ளை மனுவேற்பிள்ளை
கோ/ 5688 திரு. சீமாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை
கோ/ 5689 திரு. சின்னார் பொன்னுத்துரை
கோ/ 5692 திரு. வரப்பிரசாதம் பேதுறுப்பிள்ளை
கோ/ 5700 திரு. வரப்பிரகாசம் சுவாம்பிள்ளை
கோ/ 5721 திரு. சுப்பிரமணியம் அழகரத்தினம்
கோ/ 5722 திருமதி. அன்னம்மா திருநாவுக்கரசு
கோ/ 5727 திரு. சங்கரப்பிள்ளை பாலகிருட்டினன்
கோ/ 5734 திருமதி. ஞானாம்பிகை கனகசபை
கோ/ 5738 திரு. பொன்னையா அல்பேட்ஜெயம்
கோ/ 5750 திரு. சிலுவை கதிரவேலு
கோ/ 5753 திரு. தம்பிப்பிள்ளை காங்கேசு
கோ/ 5770 திருமதி. மகேஸ்வரி செல்வநாயகம்
கோ/ 5771 திருமதி. முத்தம்மா செல்லத்துரை
கோ/ 5777 திருமதி. முத்தாச்சி தர்மராஜா
கோ/ 5778 திரு. தம்பிப்பிள்ளை மகேசன்
கோ/ 5780 திருமதி. மகாலட்சுமி இராமநாதன்
கோ/ 5791 திரு. கனகசபை நமசிவாயம்
கோ/ 5793 திருமதி. நேசமலர் சின்னத்துரை
கோ/ 5796 திரு. கனகசபை நாகராசா
கோ/ 5802 திரு. இளையதம்பி வேலாயுதம்
கோ/ 5803 திரு. தியாகராசா பூபாலசிங்கம்
கோ/ 5806 திருமதி. புவனேஸ்வரி சுப்பிரமணியம்
கோ/ 5815 திருமதி. பஞ்சரத்னம் சிவராஜா
கோ/ 5816 திரு. சின்னத்தம்பி பஞ்சலிங்கம்
கோ/ 5836 திருமதி. செல்லம்மா செல்லத்துரை
கோ/ 5840 திரு. செல்லையா செல்வரத்தினம்
கோ/ 5857 திரு. செல்லையா சுந்தரலிங்கம்
கோ/ 5867 திரு. செல்வரத்தினம் சிவபாலன்
கோ/ 5889 திரு. பொன்னையா வடிவேல்
கோ/ 5896 திருமதி. அரியம்மா தம்பிராசா
கோ/ 5912 திரு. பொன்னுத்துரை மகாலிங்கம்
கோ/ 5916 திரு. கறுவல் பொன்னுத்துரை
கோ/ 5927 திரு. இரத்தின் இராஜநாயகம்
கோ/ 5934 திரு. சீனியன் இராசையா
கோ/ 5957 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
கோ/ 5982 திரு. சின்னத்தம்பி ஜீவரத்தினம்
கோ/ 5990 திரு. நாகலிங்கம் கந்தையா
கோ/ 5998 திரு. நாகமுத்து கனகசபை
கோ/ 6001 திரு. நடராசா குமரேசபசுபதி
கோ/ 6006 திருமதி. குணறட்ணம் மகாதேவன்
கோ/ 6011 திருமதி. மாதற்கரசி காசிநாதன்
கோ/ 6013 திரு. சின்னத்தம்பி முத்துத்தம்பி
கோ/ 6017 திரு. வைத்திலிங்கம் நாகேஸ்
கோ/ 6022 திரு. பொன்னுத்துரை நடராசா
கோ/ 6026 திருமதி. நாகரத்தினம் சிவராசா
கோ/ 6038 திருமதி. பராசக்தி குலசேகரம்
கோ/ 6039 திரு. தம்பிப்பிள்ளை இராசகோபால்
கோ/ 6049 திருமதி. இராசம்மா பொன்னுத்துரை
கோ/ 6051 திரு. பொன்னையா இராசதுரை
கோ/ 6061 திரு. தம்பிப்பிள்ளை சிவலிங்கம்
கோ/ 6070 திரு. ஆறுமுகம் சிவபாதசுந்தரம்
கோ/ 6089 திரு. நாகமுத்து செல்வரத்தினம்
கோ/ 6099 திருமதி. இராசலட்சுமி இரத்தினம்
கோ/ 6117 திருமதி. தங்கம்மா தருமலிங்கம்
கோ/ 6124 திரு. கந்தையா விஸ்வலிங்கம்
கோ/ 6126 திரு. பரராஜசிங்கம் வீரகுலசிங்கம்
கோ/ 6136 திரு. கந்தையா கனகராசா
கோ/ 6145 திரு. நாகலிங்கம் நடேசன்
கோ/ 6149 திரு. கந்தையா சின்னத்துரை
கோ/ 6151 திரு. மாணிக்கம் கந்தகுமார்
கோ/ 6154 திருமதி. தங்கம் தம்பன்
கோ/ 6156 திருமதி. கமலாதேவி தனபாலசிங்கம்
கோ/ 6162 திருமதி. பூமணி துரைசிங்கம்
கோ/ 6170 திரு. சுப்பிரமணியம் மழவராயர்
கோ/ 6178 திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்
கோ/ 6188 திரு. கணபதிப்பிள்ளை முருகமூர்த்தி
கோ/ 6213 திருமதி. நாகரத்தினம் கந்தசாமி
கோ/ 6220 திரு. சிவசம்பு தம்பித்துரை
கோ/ 6238 திருமதி. செங்கமலம் கனகசபை
கோ/ 6244 திருமதி. பராசக்தி சின்னத்துரை
கோ/ 6264 திருமதி. திருப்பதி பூபாலசிங்கம்
கோ/ 6268 திரு. தம்பிஐயா அமிர்தலிங்கம்
கோ/ 6280 திரு. வேலாயுதம் மகேந்திரன்
கோ/ 6299 திருமதி. அகில் துரைசாமி
கோ/ 6302 திருமதி. புஸ்பரத்தினம் அருளானந்தம்
கோ/ 6328 திரு. இராமலிங்கம் சோமசுந்தரம்
கோ/ 6332 திருமதி. அற்புதம் மார்க்கண்டு
கோ/ 6333 செல்வி. சிவபாக்கியம் சின்னத்தம்பி
கோ/ 6335 திரு. வையிரமுத்து வயித்திலிங்கம்
கோ/ 6345 செல்வி. ஜொய்சி மரியாம்பிள்ளை
கோ/ 6354 திரு. கதிரிப்பிள்ளை நன்னித்தம்பி
கோ/ 6365 திரு. ஞானப்பிரகாசம் அல்பேட்
கோ/ 6371 திரு. தர்மரட்ணம் எட்வின் அருந்தவ அமிர்தராஜ்.
கோ/ 6381 திருமதி. பாக்கியம் தம்பிராசா
கோ/ 6383 திரு. தம்பையா சிவசுப்பிரமணியம்
கோ/ 6390 திருமதி. சொர்ணம்மா மார்க்கண்டு
கோ/ 6395 திருமதி. மனோன்மணி செல்வஞானபிள்ளை
கோ/ 6407 திரு. அப்பாப்பிள்ளை கதிர்காமர்
கோ/ 6410 திரு. ஐயாத்துரை சண்முகநாதன்
கோ/ 6415 திரு. யோசெப்பு சுவாம்பிள்ளை
கோ/ 6418 திருமதி. பேரின்பநாயகி மயில்வாகனம்
கோ/ 6436 திரு. முருகன் சுப்பர்
கோ/ 6450 திருமதி. நாகம்மா முத்துச்சாமி
கோ/ 6454 திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை
கோ/ 6464 திரு. சிதம்பரப்பிள்ளை நடராஜா
கோ/ 6469 திரு. செல்லையா சதானந்தம்
கோ/ 6482 திரு. பொன்னுத்துரை சோதிசுந்தரம்
கோ/ 6493 திருமதி. இரத்தினம்மா சபாரட்ணம்
கோ/ 6494 திரு. சுப்பிரமணியம் சோதிலிங்கம்
கோ/ 6495 திரு. கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல்
கோ/ 6497 திரு. விசுவனாதர் கனகசபை
கோ/ 6498 திரு. வீரசிங்கம் சோமசுந்தரம்
கோ/ 6501 திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை
கோ/ 6503 திருமதி. மனோன்மணி நாகலிங்கம்
கோ/ 6531 திருமதி. சிவகாமிப்பிள்ளை தெய்வேந்திரகுமாரசாமி
கோ/ 6536 திரு. சண்முகம் கதிர்காமநாதன்
கோ/ 6541 திருமதி. சின்னப்பிள்ளை இராசையா
கோ/ 6543 திருமதி. சரஸ்வதி சபாரட்ணம்
கோ/ 6545 திருமதி. இராசபூரணம் குணரத்தினம்
கோ/ 6570 திரு. மாதர் செல்லத்துரை
கோ/ 6571 திருமதி. வினிபிரேட் கந்தையா
கோ/ 6579 திரு. தம்பு இராமலிங்கம்
கோ/ 6582 திரு. திருச்செல்வம் மேரியோசேப்
கோ/ 6592 திரு. ஆறுமுகம் செல்லத்துரை
கோ/ 6596 திரு. வின்சென்றவேதானந்தன் செல்லத்தம்பு
கோ/ 6601 திருமதி. செல்வம் யோசப்
கோ/ 6609 திரு. சின்னத்துரை யேசுதாசன்
கோ/ 6610 திரு. வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை
கோ/ 6611 திருமதி. கமலாம்பதி சுப்பிரமணியம்
கோ/ 6625. திருமதி. சின்னத்தங்கம் சின்னத்துரை
கோ/ 6629 திரு. வயிரமுத்து சொக்கநாதன்
கோ/ 6633 திருமதி. கதிராசி தம்பிப்பிள்ளை
கோ/ 6636 திரு. தம்பு காசிப்பிள்ளை
கோ/ 6638 திருமதி. மேரிதிரேசா இராசரத்தினம்
கோ/ 6642 திரு. நாகலிங்கம் கந்தசாமி
கோ/ 6645 திரு. நாகலிங்கம் இராசசிங்கம்
கோ/ 6658 திரு. சித்திவிநாயகமூர்த்தி கணேசமூர்த்தி
கோ/ 6669 திருமதி. இரத்தினம் இராசரத்தினம்
கோ/ 6671 திரு. மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்
கோ/ 6685 திரு. நாகமுத்து முத்தையா
கோ/ 6694 திரு. நாகேசு பாற்க்கண்டு
கோ/ 6700 திருமதி. சொர்ணரத்தினம் வேலாயுதபிள்ளை
கோ/ 6704 செல்வி. கமலாவதி தம்பையா
கோ/ 6708 செல்வன். சின்னத்தம்பி டிகுகுமார்
கோ/ 6711 திருமதி. பூரணம் பஞ்சலிங்கம்
கோ/ 6712 திருமதி. கனகமணி கிருஷ்ணபிள்ளை
கோ/ 6722 திருமதி. மனோன்மணி கந்தையா
கோ/ 6723 திரு. சபாரத்தினம் சாந்திகரன்
கோ/ 6724 திரு. சித்தகந்தையா நல்லதம்பி
கோ/ 6725 திரு. செல்லத்துரை சிசில்ஜோண் ஜெயராசா
கோ/ 6744 திருமதி. லட்சுமிப்பிள்ளை பூதத்தம்பி
கோ/ 6745 திரு. சின்னையா சற்குணநாதன்
கோ/ 6760 திரு. இராமர் நாகராசா
கோ/ 6776 திருமதி. திரேசா யோசவ்
கோ/ 6783 திரு. ஆறுமுகம் லோகேஸ்வரன்
கோ/ 6792 திருமதி. தங்கம்மா முத்துக்குமாரு
கோ/ 6795 திருமதி. இரத்தினேஸ்வரி தர்மலிங்கம்
கோ/ 6796 திரு. கிருஷ்ணபிள்ளை கந்தசாமி
கோ/ 6802 திருமதி. கனகாம்பிகை செல்லத்துரை
கோ/ 6808 திரு. தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம்
கோ/ 6828 திரு. தில்லையம்பலம் சுப்பிரமணியம்
கோ/ 6832 திரு. மாணிக்கம் கிருஷ்ணபிள்ளை
கோ/ 6838 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை
கோ/ 6846 திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்
கோ/ 6849 திரு. பொன்னர் ஐயம்பிள்ளை
கோ/ 6850 திரு. சரவணமுத்து தம்பிஐயா
கோ/ 6862 திரு. அருணாசலம் தர்மலிங்கம்
கோ/ 6865 திருமதி. இராசமணி இராசதுரை
கோ/ 6870 திருமதி. இரத்தினம் ஆறுமுகம்
கோ/ 6871 திரு. நன்னியன் முத்தன்
கோ/ 6886 திரு. கிருஸ்ணர் பொன்னுத்துரை
கோ/ 6887 திருமதி. சிவக்கொழுந்து கதிராமுத்தம்பி
கோ/ 6890 திரு. இளையதம்பி சரவணமுத்து
கோ/ 6891 திருமதி. பரணி சின்னையா
கோ/ 6892 திருமதி. சசிகலா இராசநாயகம்
கோ/ 6903 திருமதி. லட்சுமி மாணிக்கம்
கோ/ 6915 திருமதி. லெற்றீசியா அருளானந்தம்
கோ/ 6921 திரு. கதிரித்தம்பி ஆறுமுகம்
கோ/ 6922 திரு. கதிரித்தம்பி ஆறுமுகம்
கோ/ 6946 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
கோ/ 6969 திரு. கதிரித்தம்பி கணபதிப்பிள்ளை
கோ/ 6970 திருமதி. நாகம்மா பரராசசிங்கம்
கோ/ 6981 திரு. சபாபதி வடிவேலு
கோ/ 6991 திருமதி. அக்னேஸ் அந்தோனிப்பிள்ளை
கோ/ 6992 திரு. பொன்னையா நவரத்தினசிங்கம்
கோ/ 6993 திரு. தில்லையா தம்பிப்பிள்ளை
கோ/ 6995 திருமதி. மகேஸ்வரி நாகநாதி
கோ/ 7010 திரு. தம்பிமுத்து மயில்வாகனம்
கோ/ 7013 திருமதி. மனோன்மனி தம்பிராசா
கோ/ 7014 திரு. கந்தையா சண்முகநாதன்
கோ/ 7015 திரு. செல்லப்பா செல்லத்துரை
கோ/ 7022 திருமதி. லட்சுமிப்பிள்ளை வைத்திலிங்கம்
கோ/ 7057 திரு. தம்பிராசா காசிலிங்கம்
கோ/ 7084 திரு. செல்லத்துரை சரவணமுத்து
கோ/ 7087 திரு. சின்னத்தம்பி இராசையா
கோ/ 7088 திரு. குஞ்சான் கனகன்
கோ/ 7121 திரு. கதிரன் கணபதி
கோ/ 7130 திரு. அம்பலம் இராசு
கோ/ 7131 திருமதி. றோசலின் கிறிசோஸ்றொம்
கோ/ 7146 திரு. கதிரன் பொன்னையா
கோ/ 7151 திரு. முருகேசு சிவபாதம்
கோ/ 7173 திருமதி. சின்னமணி செல்லையா
கோ/ 7183 திரு. நாகமுத்து நாகலிங்கம்
கோ/ 7185 திரு. சீமாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை
கோ/ 7188 திருமதி. பரிமளம் தேவசகாயம்
கோ/ 7193 திரு. சின்னப்பு யோசேப்
கோ/ 7216 திருமதி. பரிமளம் விசுவாசம்
கோ/ 7218 திரு. சின்னட்டி சீனியர்
கோ/ 7241 திரு. வைரமுத்து நடராஜா
கோ/ 7247 திரு. பொன்னர் துரைராசா
கோ/ 7250 திருமதி. பொன்னம்மா சின்னப்பு
கோ/ 7265 திரு. பூதன் கனகசிங்கம்
கோ/ 7267 திருமதி. தங்கராசம் கபிரியேற்பிள்ளை
கோ/ 7269 திருமதி. லில்லிபுஸ்பமலர் நைற்
கோ/ 7276 திரு. கைலாயர் கிருஸ்ணபிள்ளை
கோ/ 7283 திரு. செல்லையா சண்முகலிங்கம்
கோ/ 7299 திரு. கந்தையா கார்த்திகேசு
கோ/ 7313 திரு. மூத்ததம்பி சண்முகலிங்கம்
கோ/ 7318 திரு. மாணிக்கம் தம்பிராசா
கோ/ 7320 திருமதி. காந்தம்மா கதிரவேலு
கோ/ 7351 திருமதி. கனகம்மா ஆறுமுகம்
கோ/ 7372 திரு. மாதன் கந்தையா
கோ/ 7375 திருமதி. சின்னம்மா முத்தன்
கோ/ 7378 திரு. சின்னையா சின்னத்தம்பி
கோ/ 7391 திருமதி. அழகம்மா செல்லப்பா
கோ/ 7392 திரு. ஞானப்பிரகாசம் இம்மானுவேல்
கோ/ 7403 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
கோ/ 7416 திரு. செல்லத்துரை கதிர்காமசுந்தரலிங்கம்
கோ/ 7421 திருமதி. கமலாம்பிகை குமாரசாமி
கோ/ 7429 திருமதி. கமலாதேவி தம்பையா
கோ/ 7437 திரு. டேவிட் ஆறுமுகம் நைல்ஸ்
கோ/ 7440 திருமதி. சத்தியவதி நல்லையா
கோ/ 7446 திருமதி. தங்கம்மா கதிரவேலு
கோ/ 7461 திருமதி. சந்திராதேவி சுப்பிரமணியம்
கோ/ 7467 திரு. மார்க்கண்டு நவரத்தினம்
கோ/ 7472 திருமதி. சோமசுந்தரம் இரத்தினசபாபதி
கோ/ 7477 திருமதி. ஜெகசோதி முத்தையா
கோ/ 7505 திருமதி. வரதலக்குமி மயில்வாகனம்
கோ/ 7511 திரு. சுப்பர் பாலசிங்கம்
கோ/ 7515 திரு. வேலுப்பிள்ளை கனகரத்தினம்
கோ/ 7517 திரு. கார்த்தி செல்லத்துரை
கோ/ 7518 திருமதி. செல்லம்மா சிதம்பரப்பிள்ளை
கோ/ 7520 திருமதி. பவளம் வேலயுதம்
கோ/ 7527 திரு. சபாபதி நல்லைநாதன்
கோ/ 7528 திரு. பிச்சைமுத்து சபாரத்தினம்
கோ/ 7532 திரு. சின்னப்பா விஸ்வநாதர்
கோ/ 7533 திரு. முருகன் கதிரன்
கோ/ 7535 திரு. அருணாசலம் சிவசுப்பிரமணியம்
கோ/ 7540 திரு. வேலன் நாகன்
கோ/ 7544 திருமதி. செல்வநாகம் தம்பிராசா
கோ/ 7545 திரு. அம்பலவாணர் நடராசா
கோ/ 7546 திரு. இளையவன் மாணிக்கன்
கோ/ 7558 திரு. கணபதிப்பிள்ளை கிட்டிணர்
கோ/ 7568 திரு. சபாபதி இரத்தினம்
கோ/ 7572 திரு. சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை
கோ/ 7574 திருமதி. நாகம்மா மாணிக்கவாசகர்
கோ/ 7585 திரு. வேலுப்பிள்ளை நடராசா
கோ/ 7591 திரு. செல்லையா இராசதுரை
கோ/ 7594 திருமதி. நவநீதம் சச்சிதானந்தன்
கோ/ 7612 திரு. முருகேசு சோமசுந்தரம்
கோ/ 7632 திரு. சிங்கநாயகம் இராஜசிங்கம்
கோ/ 7640 திருமதி. மகேஸ்வரி நடராசா
கோ/ 7641 திரு. சுப்பர் கனகசபை
கோ/ 7642 திருமதி. பூரணம் கனகன்
கோ/ 7646 திருமதி. சற்குணம் செல்லையா
கோ/ 7662 திரு. கார்த்திகேசு வினாசித்தம்பி
கோ/ 7693 திருமதி. கமலாதேவி கையிலாயபிள்ளை
கோ/ 7712 திருமதி. நாகபூஷணனி குமரைய்யா
கோ/ 7736 திரு. வைத்திலிங்கம் வியாகேசர்
கோ/ 7743 திரு. சீனிவாசகம் காசிப்பிள்ளை
கோ/ 7760 திருமதி. குப்பையம்மா இரத்தினம்
கோ/ 7785 திரு. ஆபதோத்தாரணக்குருக்கள் சந்திரசேகரக்குருக்கள்
கோ/ 7787 திரு. சோமசுந்தரம் வித்துவசிங்கம்
கோ/ 7788 செல்வி. தங்கம்மா நல்லதம்பி
கோ/ 7809 திரு. சண்முகம் பொன்னையா
கோ/ 7821 திருமதி. மாணிக்கம் கந்தையா
கோ/ 7824 திரு. கதிரவேலு தம்பிப்பிள்ளை
கோ/ 7845 திரு. தம்பிப்பிள்ளை பொன்னம்பலம்
கோ/ 7860 திருமதி. அழகரத்தினம் தியாகராசா
கோ/ 7862 திருமதி. தங்கமணி செல்லத்துரை
கோ/ 7871 திரு. சிவப்பிரகாசம் நமசிவாயம்
கோ/ 7897 திருமதி. சரஸ்வதி கிட்டிணர்
கோ/ 7898 திரு. கந்தையா புவனேந்திரன்
கோ/ 7901 திருமதி. பூபதி பொன்னுத்துரை
கோ/ 7905 திருமதி. செல்லம்மா பஞ்சலிங்கம்
கோ/ 7912 திருமதி. இலட்சுமி இளையகுட்டி
கோ/ 7913 திருமதி. சரஸ்வதி தம்பிமுத்து
கோ/ 7914 திரு. சிவகுரு நடராசா
கோ/ 7927 திரு. இராசையா மயில்வாகனம்
கோ/ 7934 திரு. சிமியோன் லாசரஸ்
கோ/ 7945 திருமதி. அன்னபூசனி எதிர்மனசிங்கம்
கோ/ 7951 திருமதி. அன்னபூரணம் திருஞானம்
கோ/ 7958 திருமதி. இலட்சுமி தருமலிங்கம்
கோ/ 7962 செல்வி. அன்னபூரணம் சண்முகம்
கோ/ 7967 திருமதி. சிரோண்மணி நடராசா

(09 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)


கோ/ 7976 திரு. பொன்னையா திருஞானம்
கோ/ 7995 திரு. அரியரட்ணம் பாலசிங்கம்
கோ/ 8006 திரு. சிதம்பரி கிருஸ்ணர்
கோ/ 8023 திரு. நீக்கிலாஸ் ஆசீர்வாதம்
கோ/ 8024 திருமதி. சிவகாமிப்பிள்ளை சிவலிங்கராசா
கோ/ 8027 திருமதி. சரஸ்வதி செல்வராசலிங்கம்
கோ/ 8045 திருமதி. செல்லம்மா சிவஞானசுந்தரம்
கோ/ 8047 திருமதி. கண்மணி வைரமுத்து
கோ/ 8052 திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு
கோ/ 8078 திருமதி. இராசம்மா அரியகுட்டி
கோ/ 8139 திரு. தம்பு பாலசிங்கம்
கோ/ 8147 திருமதி. நல்லம்மா கிருஷ்ணர்
கோ/ 8155 திருமதி. சிவக்கொழுந்து வடிவேலு
கோ/ 8160 திரு. வல்லி கிருஷ்ணர்
கோ/ 8177 திரு. முருகன் தம்பு
கோ/ 8185 திரு. தம்பு மாணிக்கம்
கோ/ 8201 திரு. வேலன் கணேசு
கோ/ 8204 திரு. ஜேம்ஸ் பொன்னுத்துரை
கோ/ 8205 திரு. கணபதி தம்பாப்பிள்ளை
கோ/ 8209 திருமதி. அன்னப்பிள்ளை மூத்தாம்பி
கோ/ 8219 திருமதி. சூரியகாந்தி இராசரத்தினம்
கோ/ 8224 திரு. சடையன் கோபாலு
கோ/ 8227 திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
கோ/ 8229 திரு. இராமையா செல்வநாயகம்
கோ/ 8233 திரு. அல்லிக்குட்டி கார்த்தியேசு
கோ/ 8236 திரு. அண்ணாமலை கனகரத்தினம்
கோ/ 8248 திரு. வைரப்பிள்ளை சுப்பிரமணியம்.
கோ/ 8264 திருமதி. தையலம்மா தம்பிராசா
கோ/ 8265 செல்வி. மகாலட்சுமி மாணிக்கவாசகர்
கோ/ 8268 திரு. நமசிவாயம் பொன்னுச்சாமி
கோ/ 8293 திருமதி. சிவபாக்கியம் செல்
கோ/ 8300 திருமதி. பூமணி கந்தையா
கோ/ 8302 திரு. இராமுப்பிள்ளை சோமசுந்தரம்
கோ/ 8307 செல்வி. பாக்கியம் கந்தையா
கோ/ 8311 திருமதி. அழகம்மா சபாரத்தினம்
கோ/ 8312 திருமதி. அலங்காரம் இராசரத்தினம்
கோ/ 8313 திரு. கந்தன் மாணிக்கம்
கோ/ 8322 திரு. வயிரமுத்து தம்பித்துரை
கோ/ 8325 திரு. காராளி ஐயம்பிள்ளை
கோ/ 8327 திரு. செல்லத்துரை சுப்பிரமணியம்
கோ/ 8344 திரு. பெரியதம்பி சீவரத்தினம்
கோ/ 8366 திரு. சின்னையா கனகரத்தினம்
கோ/ 8367 திரு. கந்தன் ஆறுமுகம்
கோ/ 8372 திருமதி. தங்கமணி கந்தசாமி
கோ/ 8380 திருமதி. செகதேவி சிவசுப்பிரமணியம்
கோ/ 8385 திருமதி. தங்கரத்தினம் சிற்றம்பலம்
கோ/ 8386 திருமதி. தங்கம்மா பொன்னர்
கோ/ 8387 திருமதி. அன்னப்பிள்ளை இராமலிங்கம்
கோ/ 8400 திரு. சிதம்பரம் சின்னத்தம்பி
கோ/ 8403 திரு. கந்தர் வைரவநாதன்
கோ/ 8423 திருமதி. வீரலஸ்சுமி ஆறுமுகம்
கோ/ 8433 திரு. அண்ணாமலை முருகையா
கோ/ 8435 திரு. கந்தர் பரமு
கோ/ 8437 திருமதி. கதிராசி சின்னப்பு
கோ/ 8448 திரு. பொன்னர் சின்னத்துரை
கோ/ 8479 திரு. சுப்பர் செல்லப்பா
கோ/ 8484 திரு. காசிநாதர் தாமோதரம்பிள்ளை
கோ/ 8493 திரு. தம்பிப்பிள்ளை கனகசபை
கோ/ 8499 திரு. கந்தையா தர்மலிங்கம்
கோ/ 8540 திரு. மூத்தான் கிட்டிணன்
கோ/ 8546 திரு. மயில்வாகனம் அருணகிரி
கோ/ 8547 திரு. நாகன் செல்லன்
கோ/ 8555 திரு. சின்னக்குட்டி சின்னத்தம்பி
கோ/ 8559 திரு. சரவணை பொன்னுத்துரை
கோ/ 8571 திருமதி. பொன்னம்மா செல்லப்பா
கோ/ 8575 திருமதி. இலட்சுமி குணம்
கோ/ 8577 திரு. சின்னத்துரை இராசேந்திரம்
கோ/ 8579 திரு. வடிவேலு வைத்திலிங்கம்
கோ/ 8595 திருமதி. இராசம்மா கந்தையா
கோ/ 8601 திரு. சுப்பர் தம்பிராசா
கோ/ 8606 திருமதி. சின்னமணி ஐயாத்துரை
கோ/ 8616 திருமதி. றோஸ்மணி சிமியோன்
கோ/ 8621 திருமதி. தங்கம்மா கதிரவேலு
கோ/ 8624 திரு. வயித்தியாம்பிள்ளை அருளப்பு
கோ/ 8625 திரு. வேலன் கணவதி
கோ/ 8636 திரு. கணபதி சின்னத்தம்பி
கோ/ 8638 திரு. வையிரவன் முருகன்
கோ/ 8644 திரு. இராமன் முருகர்
கோ/ 8648 திருமதி. அழகம்மா நல்லதம்பி
கோ/ 8653 திரு. சின்னட்டி கனகன்
கோ/ 8673 திரு. நாகமுத்து இரத்தினம்
கோ/ 8675 திரு. வயிரமுத்து வயித்திலிங்கம்
கோ/ 8679 திரு. சடையர் வயிரவப்பிள்ளை
கோ/ 8688 திரு. கணபதிப்பிள்ளை ஐயாத்துரை
கோ/ 8704 திரு. இராமு இராசலிங்கம்
கோ/ 8705 திரு. நல்லதம்பி சிவஞானம்
கோ/ 8710 திரு. யோசேப்பு சிங்கராசா
கோ/ 8716 திரு. இளையதம்பி ஜெகராசா
கோ/ 8728 திருமதி. கனகம்மா அருணாசலம்
கோ/ 8742 திரு. சின்னத்தம்பி செல்லப்பா
கோ/ 8745 திருமதி. சரஸ்வதி பொன்னம்பலம்
கோ/ 8757 திருமதி. பரிமளம் நல்லதம்பி
கோ/ 8778 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
கோ/ 8779 திருமதி. மாணிக்கம் முத்துக்குமாரு
கோ/ 8790 திரு. செல்லையா இரத்தினசபாபதி
கோ/ 8822 திருமதி. இரத்தினமலர் சண்முகராசா
கோ/ 8828 திரு. செல்லப்பா சின்னத்தம்பி
கோ/ 8837 திருமதி. பாக்கியம் சின்னத்துரை
கோ/ 8849 திருமதி. சின்னம்மா கணபதி
கோ/ 8853 திரு. கந்தன் செல்லையா
கோ/ 8856 திருமதி. அசுபவதி துரைராஜா
கோ/ 8870 திருமதி. கமலாதேவி வேலாயுதம்
கோ/ 8891 திரு. சின்னத்துரை சதாசிவம்
கோ/ 8925 திரு. நீலன் முருகேசு
கோ/ 8935 திரு. கணவதி பொன்னன்
கோ/ 8941 திரு. வல்லிபுரம் தவம்
கோ/ 8949 திரு. கனகசபை நடராசா
கோ/ 8953 செல்வி. றஞ்சினி நவரத்தினம்
கோ/ 8959 திரு. சுப்பிரமணியம் சபாரத்தினம்
கோ/ 8984 திருமதி. சின்னமணி வேலுப்பிள்ளை
கோ/ 8989 திரு. முருகேசு வினாயகமூர்த்தி
கோ/ 9008 திருமதி. மகேஸ்வரி செல்லத்துரை
கோ/ 9009 திரு. இளையதம்பி செல்லத்துரை
கோ/ 9042 திருமதி. சத்தியதேவி சண்முகநாதன்
கோ/ 9043 திரு. பண்டாரி கணபதி
கோ/ 9064 திருமதி. எள்ளுப்பிள்ளை இராசையா
கோ/ 9073 திருமதி. பத்மாவதி சின்னத்துரை
கோ/ 9074 திருமதி. முத்தம்மா ஆழ்வாப்பிள்ளை
கோ/ 9092 திரு. பொன்னர் பசுபதி
கோ/ 9095 திரு. தம்பையா தியாகராஜா
கோ/ 9114 திரு. நன்னி தம்பிமுத்து
கோ/ 9125 திருமதி. செல்லம்மா ஐயாத்துரை
கோ/ 9142 திருமதி. பொன்னம்மா செல்லையா
கோ/ 9143 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
கோ/ 9147 திரு. அப்புக்குட்டி சின்னத்துரை
கோ/ 9148 திருமதி. பகவதி பொன்னம்பலம்
கோ/ 9149 திருமதி. அழகரத்தினம் தர்மலிங்கம்
கோ/ 9159 திருமதி. இராசமணி தம்பிமுத்து
கோ/ 9165 திருமதி. சீதாலட்சுமியம்மா ஆபதோத்தாரணகுருக்கள்
கோ/ 9166 திரு. ஆறுமுகம் நாகலிங்கம்
கோ/ 9175 திருமதி. சின்னப்பிள்ளை கார்த்திகேசு
கோ/ 9176 திரு. கந்தையா முருகேஸ்
கோ/ 9179 திருமதி. தங்கம்மா வயிரமுத்து
கோ/ 9180 திருமதி. செல்வரத்தினம் பூபாலராசா
கோ/ 9190 திருமதி. வள்ளியம்மை செல்வரத்தினம்
கோ/ 9196 திருமதி. சிவமணிதேவி அன்னலிங்கம்
கோ/ 9208 திரு. நாகமுத்து சுந்தரம்
கோ/ 9215 திரு. சிவப்பிரகாசம் பேராயிரஉடையார்
கோ/ 9234 திருமதி. நல்லம்மா சித்தன்
கோ/ 9239 திரு. செல்லப்பா தேவதாசன்
கோ/ 9242 திருமதி. இராசமுத்து சபாபதி
கோ/ 9246 திரு. நாகலிங்கம் தியாகராசா
கோ/ 9254 திரு. கந்தன் கிருஸ்ணபிள்ளை
கோ/ 9259 திரு. மாணிக்கர் கந்தசாமி
கோ/ 9264 திருமதி. பாறி நாகன்
கோ/ 9267 திரு. நாகமுத்து செல்லையா
கோ/ 9271 திரு. நீக்கிலாப்பிள்ளை இராசேந்திரம்
கோ/ 9272 திருமதி. மகேஸ்வரி இளையதம்பி
கோ/ 9281 திரு. சின்னப்பு இரத்தினம்
கோ/ 9284 திருமதி. நேசமலர் அப்புத்துரை
கோ/ 9285 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
கோ/ 9289 திருமதி. சிவபாக்கியம் இரத்தினப்பிரகாசம்
கோ/ 9307 திருமதி. மனோன்மணி துரையப்பா
கோ/ 9355 திரு. நாகமுத்து கதிர்காமநாதன்
கோ/ 9399 திருமதி. பவளம்மா வீரசிங்கம்
கோ/ 9415 திருமதி. சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம்
கோ/ 9443 திருமதி. சிவசோதி சிதம்பரப்பிள்ளை
கோ/ 9453 திருமதி. சிவபாக்கியம் தம்பிராசா
கோ/ 9459 திரு. வல்லிபுரம் தில்லைநாதர்
கோ/ 9465 திரு. கபிரியேல் சந்தியாபிள்ளை
கோ/ 9475 திருமதி. சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை
கோ/ 9477 திரு. வயிரமுத்து கதிர்காமநாதன்
கோ/ 9488 திரு. கந்தையா கணேஸ்
கோ/ 9497 திருமதி. செல்லம்மா பாலசிங்கம்
கோ/ 9499 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லப்பா
கோ/ 9511 திருமதி. கனகம்மா செல்லத்துரை
கோ/ 9514 திருமதி. இராஜலட்சுமி சின்னப்பு
கோ/ 9559 திருமதி. புவனேஸ்வரி நவரட்ணராசா
கோ/ 9563 திருமதி. சிவபாக்கியம் பொன்னுக்கோன்
கோ/ 9576 திருமதி. இலட்சுமி வீரகத்தி
கோ/ 9588 திரு. சிவக்கொழுந்து நவரத்தினம்
கோ/ 9597 திருமதி. ஆச்சிப்பிள்ளை இளையதம்பி
கோ/ 9618 திருமதி. தங்கம்மா வைரவமுத்து
கோ/ 9622 திரு. மருதப்பு இராசரத்தினம்
கோ/ 9632 திருமதி. ஜானகியம்மா கந்தசாமி
கோ/ 9636 திருமதி. சரோஜினி திருநாவுக்கரசு
கோ/ 9644 திரு. இளையதம்பி இராசையா
கோ/ 9688 திரு. சின்னத்தம்பி இராசரத்தினம்
கோ/ 9689 திரு. மாணிக்கம் கந்தையா
கோ/ 9707 திரு. சின்னத்தம்பி பழனித்துரை
கோ/ 9745 திரு. சீனிவாசகம் சுப்பிரமணியம்
கோ/ 9746 திருமதி. சின்னாச்சி முத்தையா
கோ/ 9758 திரு. இராசா இரத்தினம்
கோ/ 9759 திரு. மாசிலாமணி கணேஸ்
கோ/ 9760 திரு. செல்லத்துரை செல்வரத்தினம்
கோ/ 9775 திரு. சின்னையா நடராஜா
கோ/ 9778 திரு. காலிங்கர் சின்னையா
கோ/ 9787 திருமதி. தவமணி முத்துரத்தினம்
கோ/ 9792 திரு. சுந்தரம் இரத்தினம்
கோ/ 9798 திருமதி. பொன்னம்மா மகாலிங்கம்
கோ/ 9815 திருமதி. எம்மிலிமங்கையர்கரசி ஆபிரகாம்சிவகுரு
கோ/ 9836 திருமதி. ஞானம்மா மாணிக்கம்
கோ/ 9854 திரு. சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்
கோ/ 9859 திரு. கந்தையா சண்முகலிங்கம்
கோ/ 9860 திருமதி. ராசேஸ்வரி ஆறுமுகம்பிள்ளை
கோ/ 9861 திருமதி. சிவபாக்கியம் சிங்காரம்
கோ/ 9878 திரு. முருகேசு தம்பிராசா
கோ/ 9886 திருமதி. தங்கம்மா தம்பிப்பிள்ளை
கோ/ 9894 திருமதி. இராசமணி கந்தையா
கோ/ 9896 திருமதி. அன்னப்பிள்ளை மாப்பாணர்
கோ/ 9902 திருமதி. மாணிக்கம் மாப்பாணர்
கோ/ 9913 திரு. சின்னான் பொன்னுத்துரை
கோ/ 9946 திருமதி. தங்கமலர் காசிப்பிள்ளை
கோ/ 9968 திரு. செம்பன் வல்லிபுரம்
கோ/ 9990 திருமதி. தங்கச்சியம்மா கனகரத்தினம்
கோ/ 10000 திருமதி. தெய்வநாயகி சிவசிதம்பரம்
கோ/ 10019 திரு. கந்தையா பொன்னுத்துரை
கோ/ 10021 திருமதி. செல்லப்பாக்கியம் தருமலிங்கம்
கோ/ 10032 திருமதி. தெய்வானைப்பிள்ளை இளையதம்பி
கோ/ 10036 திருமதி. தங்கம்மா கனகரத்தினம்
கோ/ 10041 திரு. சடையன் கனகன்
கோ/ 10043 திருமதி. இரத்தினம் தம்பித்துரை
கோ/ 10045 திரு. கணபதி சின்னத்தம்பி
கோ/ 10046 திரு. அருணாசலம் நடராஜா
கோ/ 10071 திரு. கந்தன் நாகமுத்து
கோ/ 10073 திருமதி. சிதம்பரம் பொன்னன்
கோ/ 10077 திருமதி. ரேணுகா குகதாசன்
கோ/ 10086 திரு. பொன்னையா வாதவூரன்
கோ/ 10122 திரு. செல்லத்துரை சந்திரசேகரம்
கோ/ 10125 திரு. சின்னத்துரை அம்பிகாபதி
கோ/ 10132 திருமதி. அன்னமுத்து தம்பிப்பிள்ளை
கோ/ 10135 திரு. சண்முகம் உருத்திரமூர்த்தி
கோ/ 10143 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
கோ/ 10155 திரு. வைரவன் வேலுப்பிள்ளை
கோ/ 10164 திருமதி. சரஸ்வதி செல்லத்துரை
கோ/ 10200 திரு. சண்முகம் செல்லத்துரை
கோ/ 10217 திருமதி. தவமணி செல்லையா
கோ/ 10218 திருமதி. செல்லம்மா சோமசுந்தரம்
கோ/ 10233 திருமதி. பரமேஸ்வரி கயிலாயபிள்ளை
கோ/ 10235 திரு. ஆறுமுகம் சிவபாதம்
கோ/ 10237 திரு. பொன்னம்பலம் துரைஐயா
கோ/ 10244 திருமதி. சின்னத்தங்கச்சி வல்லிபுரம்
கோ/ 10270 திரு. கதிரவேலு சிவஞானந்தசுந்தரம்
கோ/ 10277 திரு. முருகேசு வடிவேலு
கோ/ 10284 திருமதி. சின்னம்மா மாணிக்கம்
கோ/ 10291 திரு. நாகன் செல்லத்துரை
கோ/ 10311 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
கோ/ 10338 திரு. சின்னப்பர் தம்பிராசா
கோ/ 10352 திரு. நாகன் இரத்தினம்
கோ/ 10354 திரு. சுப்பர் செல்லர்
கோ/ 10369 திருமதி. தங்கலட்சுமி இராசையா
கோ/ 10377 திருமதி. குட்டிப்பிள்ளை வைரமுத்து
கோ/ 10380 திருமதி. மீனாட்சியம்மாள் பொன்னையா
கோ/ 10399 திருமதி. இராசம்மா சிதம்பரநாதன்
கோ/ 10406 செல்வி. இராசம்மா ஆறுமுகம்
கோ/ 10408 திரு. மயிலு இராமலிங்கம்
கோ/ 10421 திருமதி. இரத்தினம் ஆலுப்பிள்ளை
கோ/ 10432 திருமதி. அழகம்மா இராசேந்திரம்

**கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

கோ/ 237 திருமதி. தவமணிதேவி சந்திரசேகரலிங்கம்
கோ/ 318 திருமதி. செல்வமணி இராசேஸ்வரன்
கோ/ 430 திரு. பொன்னையா இராசகோபால்
கோ/ 467 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
கோ/ 521 திரு. வல்லிபுரம் சிவஞானம்
கோ/ 576 திரு. இரத்தினம் சந்திரகுமாரன்
கோ/ 612 திருமதி. அருந்ததி சுந்தரலிங்கம்
கோ/ 777 திரு. சிதம்பரப்பிள்ளை சிவபாதலிங்கம்
கோ/ 807 திரு. தர்மலிங்கம் ஸ்ரீதரலிங்கம்
கோ/ 808 திரு. இராசா சிவபாதம்
கோ/ 870 திருமதி. அருள்ஜோதி ஆறுமுகநாதன்
கோ/ 1029 திரு. கணேஸ் வைத்தியநாதன்
கோ/ 1143 திரு. பாலரட்ணம் வெஸ்லி இரட்ண இரஞ்சித்
கோ/ 1238 செல்வி. நிர்மலாதேவி சுப்பிரமணியம்
கோ/ 1265 திருமதி. பிள்ளையம்மா செல்லத்துரை
கோ/ 1324 திரு. வேலுப்பிள்ளை சிவபாதம்
கோ/ 1325 திரு. வயிரமுத்து சுப்பிரமணியம்
கோ/ 1360 திரு. தம்பாப்பிள்ளை சபாநாயகம்
கோ/ 1386 திருமதி. சரஸ்வதி நல்லதம்பி
கோ/ 1397 திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம்
கோ/ 1437 திரு. இளையதம்பி தர்மலிங்கம்
கோ/ 1585 திரு. கந்தையா சுப்பிரமணியம்
கோ/ 1840 திரு. சின்னக்குட்டி மகாலிங்கம்
கோ/ 1933 திருமதி. செல்வம் தாமோதரம்பிள்ளை
கோ/ 1939 திரு. வெள்ளையர் தம்பிராசா
கோ/ 2244 திருமதி. வசந்தி ஜெயராசா
கோ/ 2329 திரு. நல்லதம்பி கந்தையா
கோ/ 2339 திரு. சின்னத்தம்பி சத்தியநாதன்
கோ/ 2422 திரு. இராமலிங்கம் இராசையா
கோ/ 2434 திரு. நாகமுத்து சிவஞானம்
கோ/ 2490 திரு. கந்தையா பொன்னுத்துரை
கோ/ 2516 திரு. பரமு சந்திரசேகரம்
கோ/ 2533 திரு. சுப்பிரமணியம் தில்லையம்பலவாணர்
கோ/ 2537 திரு. சின்னத்தம்பி துரைராசா
கோ/ 2828 திரு. தம்பிமுத்து துரைராசா
கோ/ 3231 திரு. பசுபதி சிவநாதன்
கோ/ 3244 திரு. சிற்றம்பலம் சண்முகநாதன்
கோ/ 3256 திருமதி. சிவபாக்கியம் செல்லர்
கோ/ 3316 திரு. அரியகுட்டி அரியரத்தினம்
கோ/ 3619 திரு. சிவக்கொழுந்து இராசரத்தினம்
கோ/ 3758 திரு. கந்தையா அமிர்தலிங்கம்
கோ/ 3838 திரு. கார்த்தியேசு மகாதேவா
கோ/ 3990 திரு. முகுந்தன் தம்பிராசா
கோ/ 4068 திரு. பண்டாரம் புவிராசா
கோ/ 4193 திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணசாமி
கோ/ 4266 திரு. செல்லத்துரை இரத்தினசபாபதி
கோ/ 4292 திரு. வடிவேலு சிவசுப்பிரமணியம்
கோ/ 4295 திரு. சீவரத்தினம் சத்தியசீலன்
கோ/ 4298 திருமதி. புஸ்பரத்தினம் சிதம்பரப்பிள்ளை
கோ/ 4374 திருமதி. ஜானகி இரவீந்திரன்
கோ/ 4437 திரு. விஸ்வலிங்கம் சின்னத்துரை
கோ/ 4563 திருமதி. மோகனாம்பிகை ஆறுமுகநாதன்
கோ/ 4628 திருமதி. சிவமணி ஏழுமலைநாதன்
கோ/ 4673 திரு. கந்தையா கனகரத்தினம்
கோ/ 4712 திரு. இராசையா நடராசா
கோ/ 4806 திரு. கணபதி சின்னத்தம்பி
கோ/ 4927 திருமதி. தவமணி நாகராசா
கோ/ 5058 திரு. ஐயாத்துரை அரசபிள்ளை
கோ/ 5148 திருமதி. புவனேஸ்வரி தம்பியப்பா
கோ/ 5480 திரு. கதிர்காமு அப்புத்துரை
கோ/ 5686 திரு. டானியேல் பாக்கியரட்ணம்
கோ/ 5873 திருமதி. பவளம் திருநாவுக்கரசு
கோ/ 5996 திரு. நடராசாக்குருக்கள் கேதீஸ்வரக்குருக்கள்
கோ/ 6029 திரு. செல்லையா நடராசா
கோ/ 6101 திருமதி. இராசலட்சுமி தர்மகுலசிங்கம்
கோ/ 6325 திரு. சுப்பையா சிவஞானம்
கோ/ 6416 திருமதி. இரத்தினம் சண்முகவடிவேல்

வளரும்

இதோ யாழ்.நகரில்,
அறிமுகப்படுத்துகின்றோம்
மேதஹரணி (Meda Harani)
உங்கள் இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்தைச் சரியான அளவில் கட்டுப்படுத்துகின்றது. ஒரு முறை பாவித்துப் பயன்பெறுங்கள். ஸ்ரீ லங்கா ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பு மேத ஹரணி (MEDA HARANI)
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
(சிவை) யாழ்ப்பாணம். தொலைபேசி:222 2567




# நீதிவானைக் கொல்ல முயன்ற நபருக்கு 27 ஆண்டுகள் கடூழியச் சிறை!

கொழும்பு, ஓக.26

அவிசாவளை நீதிவான் ஜராங்கனி பெரேராவை நீதிமன்றத்தினுள் வைத்துக் கொலைசெய்ய முயன்ற நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 27 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

விதானகே லக்ஷமன் ஜெகத் பொன்சேகா என்ற குற்றவாளிக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி அவிசாவளை நீதிவான் மன்றில் அமர்வு நடந்துகொண்டிருந்த சமயம் அங்கிருந்த நீதிவான் ஜராங்கனியை கிரனேட் வீசிக் கொல்வதற்கு இந்த நபர் முயன்றுள்ளார். வீசப்பட்ட குண்டு நீதிமன்றத்தினுள் வீழ்ந்து வெடித்ததில் நீதிவான் காயமடைந்தார். தாக்குதலை நடத்தியவர் பின்னர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

குண்டு வீசி நீதிவானைக் கொலைசெய்யச் சதித்திட்டம் தீட்டியமை, குண்டு வீசி நீதிவானுக்குக் காயம் ஏற்படுத்தியமை, மரணத்தை விளைவிக்கக் கூடிய குற்றம் புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர்மீது சுமத்தப்பட்டன. மூன்று குற்றச்சாட்டுகளிலும் பொன்சேகா குற்றவாளியென நிரூபிக்கப்பட்டார்.

மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ அவருக்கு 27 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். முதல் இரு குற்றங்களுக்காகவும் தலா 13 ஆண்டுகள் சிறையும், மூன்றாவது குற்றத்துக்காக ஒரு வருடச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

(க-3)




## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஓக.26

ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழிக் (ELTC)கற்பித்தல் துறையினரால் நடத்தப்படும் மேற்படி ஒன்றுகூடலில் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி மாணவர்கள் அனைவரையும் ஒன்றுகூடுமாறு யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறைத் தலைவி திருமதி ச.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

(3-ரி)

* * *

வலி.தெற்கு,ஓக.26

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை இரவு ஏழு மணியளவில் நடைபெறவுள்ளது. உடுவில் இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் மன்றத் தலைவர் சி.தியாகச்சந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

(3-152)

## விபத்தில் இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஓக.26

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் காயமடைந்தனர்.

கூழாவடி, ஆனைக்கோட்டைப் பகுதியில் நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த ச.சத்தியராஜ் (வயது 20) என்பவர் காயமடைந்து, யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

நயினாதீவில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்ததில் நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் குகனேஸ்வரி (வயது41) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் ஊர்காவற்றுறை அம்புலன்ஸ் வண்டியில் யாழ். போதனாவைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

(3-12-ரி)

## பாடநூல்கள் விவரம் கையளிக்கப் பணிப்பு

தென்மராட்சி,ஓக.26

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் அடுத்த வருடத்திற்குரிய (2006) இலவச பாடநூல்களின் தேவை தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன.

தேவையான பாடநூல்களின் விவரங்களை சகல பாடசாலை அதிபர்களும் இன்று சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கேட்டுள்ளார்.

(3-117)

## அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

தென்மராட்சி,ஓக.26

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கைகளை வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு மாவட்ட, பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள் ஆகியோரை யாழ்.அரச அதிபர் க.கணேஸ் கேட்டுள்ளார்.

(3-117)

# வடக்கின் விவசாய அபிவிருத்தி; பொருண்மிய மாநாட்டில் ஆராய்வு

வடக்கின் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மாநாடு ஒன்று கடந்த 23ஆம் திகதி வட்டக்கச்சியிலுள்ள பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த அரச திணைக்கள அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிநிதிகள், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

வட தமிழீழத்தின் திட்டமிடாத செயற்பாடுகள் காரணமாகவே விவசாயத்தில் ஏற்படுகின்ற பின்னடைவுகள் தொடர்பாக இதில் விரிவாக ஆராயப்பட்டது.

'நியாப் II' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டதுடன், கிராமிய விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் எதிர்வரும் பெரும்போகம், சிறுபோகம் ஆகியவற்றில் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

(த-352)




மாநாட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் உரையாற்றுவதையும் மாநாட்டில் கலந்துகொண்ட அதிகாரிகளையும் படத்தில் காணலாம். *(படம்: மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)*

## 'முதலுதவி' நூல் வெளியீடு

பரந்தன்,ஒக.25

வன்னி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் ஆணையாளர் வோ.சிறிதரனின் 'முதலுதவி' நூல் வெளியீட்டு விழா கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலின் முதற் பிரதியை மனிதவள மேம்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் சி.அன்புச்செல்வன் வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலனும் மதிப்பீட்டுரையை கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கணேசலிங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி யுனிசெவ் பிரதிநிதி கந்தசாமி ஆகியோர் நிகழ்த்தினர். (த-352-203)

## புதுக்குடியிருப்பில் சிறப்புற நடந்த புலிகளின் குரல் முத்தமிழ் அரங்கம்

கிளிநொச்சி,ஒக.26

புதுக்குடியிருப்புப் பிரதேச புலிகளின் குரல் வனொலி மன்றத்தின் மாதாந்த முத்தமிழ் கலையரங்க நிகழ்வு கடந்த 23ஆம் திகதி உடையார்கட்டு மகாவித்தியாலய மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

உடையார்கட்டுப் பிரதேச அரசியல்துறையினரின் ஆதரவுடன் புதுக்குடியிப்புப் பிரதேச புலிகளின் குரல் வானொலி மன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மன்றச் செயலாளர் சுகிர்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், உடையார்கட்டு மகாவித்தியாலய முதல்வர் ராஜா, தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஆகியோர் ஏற்றினர்.

சிறப்புரையைப் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு நடைபெற்றது. கலைஞர்களுக்கான சான்றிதழ்களை செ.முகுந்தன், ச.கனகரத்தினம், தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் இன்னிசைக் கானங்களும் பாரத் சிறுவர் இல்லச் சிறார்களினதும், உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவர்களினதும் கலை நிழ்வுகளும் நடைபெற்றன.

(த-204)

## வவுனியாவில் இதுவரை 9,700 மிதிவெடிகள் மீட்பு

ஒட்டுசுட்டான்,ஒக.26

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 700 மிதிவெடிகள் அகற்றப்பட்டிருக்கின்றன என்று மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மிகவும் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு முடிவடையும் போதும் தொடர்ந்து பணியாற்றுவதாக இருந்தால் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இப்பணி முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் 'எவ்.எஸ்.ரி', 'ஏ.சி.சி.பி'-'எம்.எம்.ஐ.பி', 'சர்வத்திரா'ஆகிய நிறுவனங்களும் சிறிலங்கா இராணுவத்தினரது கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் கண்ணிவெடி அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை 8 லட்சத்து 29 ஆயிரத்து 333 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 9ஆயிரத்து 700 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 27 கிராமங்களில் இப்பணி முடிவுற்றிருக்கிறது என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் மேலும் தெரிவித்துள்ளார். (த-341)




## மணல் அகழப்படுவதால் போக்குவரத்துக்குப் பாதிப்பு

ஒட்டுசுட்டான்,ஒக.26

கெருடமடுவில் இருந்து குறுகிய வழியாகக் கூழாமுறிப்பு ஊடாக முல்லை வீதியை சென்றடையும் வீதியில் உள்ள பேராற்றின் வழியை மறித்து மணல் அகழப்பட்டு வருகிறது.

இதனால் அந்தப் பாதையால் மக்கள் பிரயாணத்தை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கற்சிலைமடு, பேராறு, மன்னாகண்டல் இடதுகரை, 3ஆம் கண்டப் பகுதி மக்கள் குறுகிய பாதையாக இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பாதை கிரவல் பறிக்கப்பட்டு பாலங்கள் அமைத்து பாரஊர்திகள் செல்லும் வழியாக அமைக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு நடுவிலே பேராறு பாய்வதால் அதற்கு பாலங்கள் எவையும் அமைக்கப்படாத நிலையில், வாகனங்கள் செல்லக்கூடியதாக தற்காலிக பாதை அமைத்து போக்குவரத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த வீதியில் தற்போது மண் அகழ்வினை மேற்கொள்வதனால் அவ்விடத்தில் பாரிய குழி ஏற்பட்டு பயணத்திற்கு தடை ஏற்படவாய்ப்புண்டு. எனவே பிரதேசசபை இதனைக் கவனத்திலெடுத்து மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்தவேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (த-341)

# சமாதானம் என்ற போர்வைக்குள் நின்று சிங்களப் பேரினவாதிகள் கபடநாடகம்

## நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் உரை

ஒட்டுசுட்டான்,ஒக.26

சமாதானம் என்ற போர்வையைப் போர்த்துக்கொண்டு இன்று புலிகளைக் கொல்கின்ற வகையில் சிங்களப் பேரினவாதம் கபட நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சி.வேதவனம்.

அண்மையில் கற்சிலைமடுவில் இடம்பெற்ற வீரமுரசு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தங்கத் தலைவன் காலத்திலே நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இங்கே எமது பிள்ளைகள் இந்த மண்ணிற்காகத் தினமும் மடிந்துகொண்டிருக்கிறார்கள். சமாதான காலத்திலாவது உயிர் வாழமுடியாத நிலை ஏற்பட்டுவருகிறது. என்றுமில்லாத - எங்குமில்லாத அநியாயம் இந்த மண்ணில் நடந்து கொண்டிருக்கிறது.

சமாதானம் என்ற போர்வைக்குள்ளே இந்த மாயைக்குள்ளே புகுந்திருக்கின்றோம். மக்கள் சந்திக்கப்போவது என்ன? எங்களுக்கு இந்தச் சிங்களம் சொல்லப்போகும் செய்தி என்ன? என்பதையெல்லாம் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

1996ஆம்ஆண்டு யாழ்ப்பாணத்திலே புலிகளை விரட்டிய ரத்வத்தை சொன்னார் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை உடைத்து விட்டோம். விடுதலைப் புலிகளால் வாழ முடியாது. இந்த மண்ணை ஆழமுடியாது. யாழ்ப்பாணத்தில் கொடியேற்றிவிட்டோம் என்று.

முல்லைத்தீவிலே ஓயாத அலை - 03 ஓங்கியடித்து இரண்டு ஆட்லறிகளைப் பெற்ற எங்கள் தலைவனின் வரலாறு யாருக்கும் ஒரு புதிய விடயமல்ல.

வரலாற்று நாயகன் பண்டாரவன்னியன் வசித்த மண்ணிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வீரம் விளைந்த மண்ணிலே வீரத் தலைவனுடைய காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, நாம் வீரமுள்ளவர்களாக இருக்கவேண்டும். விடுதலைத் தாகம், விடுதலைப் புரட்சி கொண்டவர்களாக இருக்கவேண்டும் - என்றார். (த-341)

## கண்டாவளையில் இவ்வருடம் போசாக்குக் கல்வித்திட்டம்

பரந்தன்,ஒக.26

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் இந்த வருடம் உணவு போசாக்கு கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப் படவிருக்கிறது என்றும் கூறப்பட்டது.

இந்த உணவு போசாக்கு கல்வித்திட்டம் தொடர்பான பெண்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி புன்னை நீராவியடி அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

புன்னை நீராவியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சாரதா இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கண்டாவளைப் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி நே.பாஸ்கரன், குடும்பநல உத்தியோகத்தர் திருமதி ஜெயவதனி நவேந்திரம், திட்டமிடல் உத்தியோகத்தர் மொன்ரனி, கிராம அலுவலர் கேதீஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (த-352)

## புதிய வேகக் கட்டுப்பாட்டு விதி காவல்துறையினரால் அறிவிப்பு

கிளிநொச்சி,ஒக.26

வன்னிப் பிரதேச வீதிகளில் வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பவற்றுக்கு முன்பாகச் செல்லும்போது 20 கிலோ மீற்றர் வேகத்திற்கு அதிகமாக வாகனங்களைச் செலுத்தக் கூடாது என்று தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்திருக்கின்றனர்.

இந்த வேகக்கட்டுப்பாடு தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள், எதிர்நோக்கி வரும் வீதிக் கடவைப் பிரச்சினை மற்றும் வீதிவிபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் இந்தப் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மருத்துவமனைகளுக்கு முன்னால் இருபது கிலோமீற்றர் வேகத்தில் வாகனத்தைச் செலுத்தவேண்டும். பாடசாலைகள், மருத்துவமனைகளுக்கு முன்னால் வீதியொழுங்கு தொடர்பான குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ் வீதியொழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறும் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(த)

## உபதபாலகம் இல்லாததால் செம்மலை மக்கள் சிரமம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலைப் பிரதேசத்தில் உப தபாலகம் இல்லாமையால் மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 7 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்றே தாம் தமது தேவையை நிறைவேற்றிக்கொள்கின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

செம்மலை உபதபாலகத்திற்கான கட்டடம் ஒன்று அமைத்துத் தருமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவற்றைக் கோரியிருந்தபோதும், இதுவரையில் எந்த நிறுவனமும் கட்டடம் அமைத்துத் தருவதற்கு முன்வரவில்லையென்று அப்பகுதி கிராமசேவையாளர் வி.புஸ்பராஜா கூறினார்.

அரச உயர் அதிகாரிகளையும் தாம் இது தொடர்பாக உதவிகேட்டபோதும், இதுவரையில் அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் ஆகவே, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் உப தபாலகம் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-415)

# கரம்பன் ஐந்தாம்புல வீதி புனரமைப்பு

ஊர்காவற்றுறை, கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறை நோக்கிச் செல்லும் பிரதான வீதிகளில் ஒன்றான ஐந்தாம்புல வீதி ஊர்காவற்றுறைப் பிரதேசசபையினால் தற்பொழுது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தில் இருந்து 6 லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவில் இவ்வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் செயலாளர் ஏ.கணேசானந்த ராஜா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, கரம்பன் கண்ணகை அம்மன் வீதி மிகவும் மோசமான முறையில் சேதமடைந்துள்ள இந்நிலையில், இவ்வீதியின் இடையில் இணையும் ஐந்தாம்புல வீதியை மாரிகாலத்திற்கு முன்பு புனரமைப்புச் செய்து வழங்குவதன் மூலம் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறை நோக்கிச்செல்லும் பயணிகள் எதிர்நோக்கி வந்த பிரச்சினை ஓரளவிற்குத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-16)


## கற்பக விநாயகர் மகளிர் சிக்கன கூட்டுறவுச் சங்கம் உரும்பிராய்

27.8.2005 இல் நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டுக் குலுக்கல் தவிர்க்க முடியாத காரணத்தால் 11.10.2005 அன்று நடத்தி வைக்கப்படும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

- நிர்வாக சபையினர்.

(39287)(21.15.45)


## வலிமேற்கில் மேலும் மூன்று சம்மேளனங்கள்

வலி மேற்குப் பிரதேசத்தில் புதிதாக மூன்று விவசாய சம்மேளனங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் மேற்கொண்டுள்ளார்.

வட்டு. கிழக்கு, வட்டு. வட்டுகிராம அலுவலர் பிரிவுகள் ஒரு சம்மேளனமாகவும், வட்டு.மேற்கு.வட்டு. தெற்கு இரண்டாவது சம்மேளனமாகவும், வட்டு. தென்மேற்கு, சங்கரத்தை என்பன மூன்றாவது சம்மேளனமாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விவசாயிகளின் நன்மைகருதி சம்மேளனங்கள் அதிகரிக்கப்படவுள்ளன என்றும் -சகல விவசாயிகளும் சம்மேளனங்களில் பதிவு செய்வது இன்றியமையாதது என்றும்- கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எ-175)


உ
ஸ்ரீ ராம ஜெயம்

**பொன்னாலை**

**ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான**

**2005 பார்த்திப வருஷ ஆவணி மாத திவ்விய**

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

வேட்டைத்திருவிழா இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணி
தேர்த்திருவிழா நாளை 27.08.2005 சனிக்கிழமை
வசந்தமண்டபபூஜை -10 மணி
தேரில் எழுந்தருளல் - 11.30 மணி
உறியடி உற்சவம் - 1.00 மணி
கிருஷ்ண ஜெயந்தி - இரவு 12.00 மணி
ஸ்நபனாபிஷேகப் பூஜை, உற்சவம் தாலாட்டு பூஜை நிகழும்.
தீர்த்தத் திருவிழா 28.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு
திருவடி நிலை புறப்படல் 11 மணிக்கு தீர்த்தம்
மாலை 6 மணிக்கு கொடியிறக்கம்
சங்காபிஷேகமும் திருக்கல்யாணமும் 29.08.2005 திங்கட்கிழமை பகல் 1008 சங்காபிஷேகம்
மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம்.
ஆஞ்சநேயர் மூலவருக்கு அபிஷேக
பொங்கல் உற்சவம் 11.09.2005 ஞாயிற்றுக்கிழமை.

தேவஸ்தான உற்சவ பிரதமகுரு: பிரதிஷ்டா கிரியாபானு வேதாகம கிரியா கலாபூஷணம்
**பிரம்மஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
தினமும் மாலை 7.00 மணிக்கு தெய்வீக சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.
தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும்.
அடியார்கள் உற்சவ காலங்களில் பூஜை திரவியங்களை உபகரித்து
இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.
பாடசாலை மாணவர்களினதும் சென்ஜோன்ஸ் பிரிவினதும் தொண்டர் சேவை நடைபெறும்
'அனைவரும் வருக நாராயணன் அருள் பெறுக'

பொன்னாலை,
சுழிபுரம்.

*கோவிந்த நாம சங்கீர்த்தனம்!*
*கோவிந்தா! கோவிந்தா!!!*

*தேவஸ்தான பரிபாலன சபை.*

(39293)(21-45-15)



உ
ஓம் நமோ நாராயண நம

**அளவெட்டி - நாகேஸ்வரம்**

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

*மெய்யடியார்களே,*

இன்று எம்பெருமானுக்குப் புதிதாக ஆக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம். பார்த்திப வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள் இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு நிகழும். அனைவரையும் வந்து தரிசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| காலை | 7.00 மணி | சங்காபிஷேகம் |
| முற்பகல் | 9.00 மணி | தம்பபூசை |
| முற்பகல் | 9.30 மணி | வசந்த பூசை |
| முற்பகல் | 11.30 மணி | தேர் சம்பந்தமான பூசைகள் |
| நண்பகல் | 12.15 மணி | சித்திரத்தேர் வெள்ளோட்டமும் கௌரவிப்பும் |

❑ சித்திரத்தேரை சுமார் 10 மாதத்துள் சிருஷ்டித்த திருநெல்வேலி திரு.இராசதுரை பிரபாகரனுக்கு (பிரான்) 'சித்திரத்தேர் கலைஞானி' என்ற பட்டம் வழங்குவதோடு கலைஞர்களையும் கௌரவிக்கின்றோம்.

மாலை 6.30 மணி பெரிய சப்பரத்துக்கு சுவாமி எழுந்தருளல்.

### தேர் உற்சவம்

**27.08.2005 சனிக்கிழமை தேர் உற்சவம் நடைபெறும்**

| | | | |
|---|---|---|---|
| காலை | 7.30 | மணி | சங்காபிஷேகம் |
| முற்பகல் | 11.00 | மணி | சுவாமி தேருக்கு எழுந்தருளல் |
| இரவு | 7.00 | மணி | உறியடி உற்சவம் |

(சி-44782)(21-45-15)


விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:
**லிங்கம் கூல்பார்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

பொறுப்புரிமைப் பரிபாலன சபையினர்.



# 31ஆம் நாள் நினைவுக் காணிக்கை

## கணமும் ஏங்குகிறோம்...!



அமரர்
**சிவசுப்பிரமணியம் மயூரன்**

மண்மகிழ் 28.11.1980
விண்நெகிழ் 25.07.2005

மனதில் நீ ஏந்திவைத்த...
நினைவுகள் மயூரா...
கனவில் உனைக் காணுகின்ற
கணங்கள் மயூரா...
ஏனென்றே தெரியாமல்
உனைப் பறித்த கடவுள்...
.................................?!
உன்மனம் என்ற மாலையணிந்து
தினம் என்ற கோலங்கொண்டு
வனம் வாழ்கின்றோம் - நீ
வந்து பிற மீண்டும் - நாம்
தினம் சிரிப்போம் - நினைந்து
கணமும் ஏங்குகிறோம்...
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆருயிர் நண்பர்கள்.

(39282)

# பயங்கரவாதத்தை தூண்டுவோருக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும்

## ஐ.நா.விடம் பிரிட்டன் வேண்டுகோள்

நியூயோர்க், ஓக.26

**பயங்கரவாதத்தைத் தூண்டுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். அதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையில் இயற்றப் படவேண்டும். இதற்காக பாதுகாப்புச் சபையில் அங்கம்வகிக்கும் நாடுகளின் உயர் தலை வர்கள் கலந்துகொள்ளும் உச்சிமாநாட்டைக் கூட்டவேண்டும் என்று பிரிட்டன் வேண்டு கோள் விடுத்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் 15 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் கூட்டங்களில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகள் தான் பங்கேற்பார்கள். மிகவும் அவசியமான விஷயம் என்றால் அந்தந்த நாடுகளின் வெளி யுறவுத்துறை அமைச்சர்களோ, நாட்டின் உயர் தலைவர்களோ இதில் பங்குகொள்வார்கள்.

உறுப்புநாடுகளின் உயர் தலைவர்கள் அனை வரும் பங்கேற்கும் உச்சி மாநாடு இதுவரை நடந்ததே இல்லை. எனவே, பிரிட்டனின் கோரிக்கை அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

லண்டன் நகரில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளால் பிரிட்டன் எந்தளவு பீதிய டைந்துள்ளது என்பதையும் இந்த வேண்டு கோள் காட்டுகிறது. பயங்கரவாதச் செயல் களைக் கட்டுப்படுத்தவும், ஒடுக்கவும் சர்வ தேசச் சட்டங்கள் இருக்கும்போது பாதுகாப்புச் சபையில் தீர்மானம் இயற்றுவதை உறுப்பு நாடுகள் ஏற்குமா என்பது தெரியவில்லை.

அமெரிக்காவுக்கான ஐ.நா. அதிகாரி ரிச்சர்ட் கிரனேனிடம் இதுகுறித்து கேட்டபோது, ''பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தீர்மா னம் என்பது முக்கியமானதுதான். ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வருவாரா, வேறு யார் வரு வார்கள் என்றெல்லாம் இப்போதே ஊகிக்க முடியாது.''- என்று பதிலளித்தார்.

செப்டெம்பர் மாதம் பாதுகாப்பு சபை கூடவிருக்கிறது. பிலிப்பைன்ஸ் தலை மையில் கூடவுள்ள இக்கூட்டம் தொடர்பாக பேச்சுகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது. ஆனால், யார் பங்கேற்பார்கள். எப்போது கூட்டம் நடக்கும் என்பதெல்லாம் இதுவரை தெளிவாகவில்லை என்று பிலிப்பைன்ஸ் துணைத் தூதர் பயானி மொர்காடோ தெரிவித்தார்.(க-8)

## அதிகரித்து வரும் வெப்பத்தால் உருகிக் கரைகிறது உலக அதிசயம்

இலுலிசாட், ஓக.26

கிரீன்லாந்தில் இலுலிசாட் என்ற இடத் ... உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான பனிச்சிகரம் உருகிக் கரைந்துவருகின்றது.

மோட்டார் வாகனங்கள், இரசாயன ஆலை கள், தொழிற்சாலைகள் போன்றவை வெளி யேற்றும் நச்சுப் புகையாலும், காடுகளை அழிப்பதாலும் பூமியின் வெப்பம் அதிகரித் துள்ளமை இதற்கு முக்கிய காரணமாகும்.

வெப்பத்தின் விளைவாகத்தான் இப்படிப் பனி உருகுகிறது. இது அனைவரும் அறிந்த விஷயம் என்றாலும் பனி உருகும் வேகம் தான் கதிகலங்கவைக்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 10 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட பரப்பு இங்கு உருகிவிட்டது. 2002 ஆண்டு முதல் 2003 ஆண்டு வரையிலான காலத்தில் மட்டும் 7 கிலோ மீட்டர் பரப்புக்கு பனி உருகிவிட்டது.

இத்தகவலை ராபர்ட் கோரல் என்ற

உலக அரங்கில்

அமெரிக்க நி...ணர் தெரிவித்துள்ளார். ஆர்க் டிக் பிரதேசத்தின் பருவநிலை குறித்து ஆராய 250இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்குழு 1,400 பக்க அறிக்கையை அளித் திருக்கிறது.

ஆர்க்டிக் பகுதிமீது ஹெலிகொப்டரில் பறந்து நேரில் பார்த்த கோரல் தன்னுடன் 22 நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்களையும் நேரில் அழைத்துச்சென்று காட்டினார் என் பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# உணவுப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர நைகருக்கு உதவிகள் விரைவில் வழங்கப்படும்

## ஐ.நா. செயலாளர் நாயகம் உறுதி

லண்டன், ஓக.26

ஆபிரிக்க நாடான நைகரில் நிலவும் உண வில்லாப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான உதவிகளை தாம் வழங்குவார் என ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அந்நாட்டு அரசுக்கு உறுதிய ளித்துள்ளார்.

நைகருக்கு இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்ட அவர், அவரது விஜயத்தின் இறுதிக் கட்டத்தில் அந்நாட்டு ஜனாதிபதி மாமாடோ டன்ஜாவை சந்தித்து பேச்சுகள் நடத்தியபோதே இவ்வாறு உறுதியளித்தார்.

இந்த பேச்சுகளின்போது பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள 2 கோடியே 50 லட்சம் மக்களின் நிலைமை குறித்தும், மரணத்தை எதிர்நோக்கியுள்ள 32 ஆயிரம் சிறுவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பட்டினியாலும், போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டுள்ளவர் களுக்கு இலவச மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தவாரம் ஐ.நா. தமக்கு உரிமை வழங்கியுள்ளதென 'மெடிசின் கேன்ஸ் புரொன்டிரெஸ்' என்ற மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

''நாட்டிலும், பட்டினியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தியங்கள் குறித்தும் நாம் பேச்சுகள் நடத்தினோம். இந்தப் பிரச்சி னைக்கான தீர்வு விரைவில் எடுக்கப்படும். இந்த ஆண்டுக்குள் என்ன செய்ய முடியுமோ அதனையே நாம் செய்யவேண்டும். எதிர் காலத்தைப் பற்றி பிறகு சிந்திக்கலாம்.''- என அனான் கூறினார்.

உள்ளூர் அதிகாரிகளுடனும், ஏனைய உதவி நிறுவனங்களுடனும் பேச்சுகள் நடத்திய அவர், நேற்று மீண்டும் ஐ.நாவுக்கு திரும்பினார். ஐ.நா. சபை அதன் பொறுப்பை நிறைவேற்றி யுள்ளது. ஆனால், அதன் நடவடிக்கையில் விரைவு தெரியவில்லை.

மேலும், ஐ.நாவினால் வழங்கப்படும் உதவிகள் அதிகமாக தேவைப்படும் மக்க ளுக்கு போய் சேரும் என்று உத்தரவாத மளிக்கமுடியாது என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (க-8)

## மீண்டும் வடகொரிய அணு விவகாரப் பேச்சுகள்

### சீன உபவெளிவிவகார செயலாளர் அறிவிப்பு

டோக்கியோ,ஓக.26

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வடகொரிய அணு விவகாரம் தொடர்பான பேச்சுகள் பெய்ஜிங்கில் அடுத்தவாரம் ஆரம் பிக்கப்படும் என சீன உப வெளிவிவகார அமைச்சர் வூடா பேய் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டுள்ள அவர் தகவல் தருகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இருந்தபோதிலும் அமெரிக்காவும், வட கொரியாவும் இந்த விடயம் தொடர்பாக எந்த வித கருத்துக்களையும் இதுவரை வெளியிட வில்லை.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸாரைஸ் வாஷிங்ரனில் தென் கொரிய வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுகள் நடத்தியுள்ளார். இந்த இருவருட னும் இணைந்துக்கொள்வதற்கென ஜப்பான் பிரதிநிதியொருவர் நேற்று வாஷிங்ரன் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, வடகொரியா, ஜப்பான், சீனா, தென்கொரியா, ரஷ்யா, ஆகிய நாடு கள் பங்குபற்றும் பேச்சுகள் இருவருடகால இடைவெளிக்கு பின்னர் கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. என்றபோதிலும் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படாத நிலையில் மீண்டும் பேச்சுகளை நடத்துவது என்ற தீர்மானத்துடன் பெய்ஜிங் பேச்சுகள் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.(க-8)




ஜப்பானில் அடுத்த மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. இதில் லிபரல் ஜனநாயகக் கட்சி சார்பில் பிரதமர் ஜூனிச்ரோ கொய்சுமி மீண்டும் போட்டியிடுகிறார். டோக்கியோ நகரில் திறந்த வானில் அவர் பிரசாரம் செய்யும் காட்சி இது.

# காஸா எல்லையில் எகிப்து பொலீஸை நிறுத்த இருநாட்டு அரசுகளும் திட்டம்

இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெறப்பட்ட தும் காஸாமுனை எல்லையில் எகிப்து பொலீஸ் படை நிறுத்தப்படவுள்ளது. பலஸ் தீனத்தில் காஸா முனைப் பகுதியில் கடந்த 38 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்திருந்த இஸ் ரேல் இராணுவம் வாபஸ் பெறப்படுகிறது. இப்பகுதிகளில் வசித்த யூதக் குடும்பங்கள் நேற்றுமுன்தினம் முழுமையாக வெளியேற் றப்பட்டன.

இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட் டில் காஸாமுனை இருந்ததால் எகிப்தில் இருந்து பலஸ்தீனத்துக்குள் ஆயுதங்கள் கடத்தப்படு வது தடுக்கப்பட்டுவந்தது. இஸ்ரேல் இராணு வம் வாபஸ் பெறப்பட்டால் பலஸ்தீன தீவிர வாதிகளுக்காக எகிப்தில் இருந்து ஆயுதங்கள் எளிதாகக் கடத்தும் வாய்ப்பும் உள்ளது. இதை தடுக்க இஸ்ரேல் - எகிப்து அரசுகள் கெய் ரோவில் பேச்சு நடத்தின.

எல்லையில் 750 பொலீஸாரை பாதுகாப் புப் பணியில் ஈடுபடுத்த எகிப்து திட் டமிட்டுள்ளது. இதற் கான ஒப்பந்தத்தைஇஸ் ரேல் - எகிப்து அதிகாரி கள் நேற்றுமுன்தினம் இறுதிசெய்தனர். இரு நாட்டு நாடாளுமன்றங் களிலும் இதற்கு ஒப்பு தல் வழங்கப்பட்டதும் ஒப்பந்தம் கையெழுத் தாகும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குள் காசாமுனை யில் இருந்து இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெறப்படவுள்ளது. (க-8)




# ஷியா குழுக்களுக்கிடையில் மோதல் ஈராக்கில் 17பேர் பலி பலர்; காயம்!

ஈராக்கின் நஜாப் நகர்ப் பகுதியில் ஷியா முஸ்லிம்களின் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் சுமார் 17 பேர் உயிரி ழந்தனர். 12இற்கும் அதிகமானோர் காயம டைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு ஷியா முஸ்லிம் மதக் குருக்களின் ஆதரவாளர்களின் குழுக்களே நேற்றுமுன் தினம் இந்த மோதலில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவிர ஷியா முஸ்லிம் மதக் கொள்கை வாதியான மொக்குடாடாடாவின் ஆதரவா ளர் ஒருவர், மற்றுமொரு ஷியா மதகுருவான சாட்டிரின் ஆதரவாளரை நோக்கி துப்பாக் கிச் சூடு நடத்தினார்.இதனைத் தொடர்ந்தே இந்த மோதல் தீவிரமடைந்தது என்று அதி காரிகள் தெரிவித்தனர்.

நஜாப் நகரின் இமாம் அலி பள்ளிவாசலின் முன்பே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் அமைச்சரவையின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த மோதலையடுத்து தமது கடமைகளை இடை நிறுத்தி வைத்துள்ளனர் என்றும்-

நாட்டில் நிலவும் அமைதியைக் குலைக் கும் முகமாக இந்த வன்செயல் அமைந்துள் ளது என்றும் அந்நாட்டுப் பிரதமர் தெரிவித்தார்.

தொலைக்காட்சியில் தோன்றி உரையாற் றிய அந்த நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் அல் - ஜபாரி, இந்த வன்முறையை வன்மை யாகக் கண்டித்தார்.

''நமது நாட்டில் அமைதியை நிலை நிறுத் துவது அவசியம். ஆனால், இந்த வன்முறை மொழிகள் அமைதியை ஏற்படுத்தாது. துப் பாக்கிகளினால் புதிய ஈராக்கை உருவாக்க முடியாது.''- என்று அவர் மேலும் கூறினார்.

நஜாப் பகுதியில் விசேட அதிரடிப்படை யினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளனர் எனவும், அந்தப் பகுதியில் ஊரடங் குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## 24.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வாசனாவ

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல. 1635

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200545686 இலிருந்து 200563903 வரை

வெற்றி எண்கள்

**09 11 26 70** சுப்பர் எண் **14**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.28,07,800/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 28,07,800/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 35 | 5,000/- | 1,75,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 482 | 1,000/- | 4,82,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,631 | 500/- | 8,15,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,668 | 40/- | 9,46,720/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,563 | 20/- | 4,51,260/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,37,119 | 10/- | 33,71,190/- |
| | | மொத்தம் | 82,41,670/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 87,41,670/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 37,08,550/-**

தொடர் இல. 300523139 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 27 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ரூபா 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறிமை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 200550615-0-07 |
| கண்டி | 200553300-6-79 |
| திருகோணமலை | 200551800-7-21 |
| மாத்தறை | 200548612-2-14 |
| மாத்தளை | 200551867-4-66 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

**போட்டி நிபந்தனைகள்:**

- ✓ போட்டியானது ஆண்/பெண் இரு பாலாருக்குமானதாகும்.
- ✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
- ✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
- ✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போட்டி
C/o உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் ....................
2. விலாசம் ....................
3. பிறந்த திகதி ....................
4. தொலைபேசி இல ....................
5. தேசிய அ.அட்டை இல ....................
6. பால் ....................

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப் போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ....................
திகதி ஒப்பம்


# சமய சந்நிதிகளில்

மூளாய்,ஓக.26

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இன்று மாலை 7 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து ஒரு மணிக்கு உறியடி உற்சவமும் இரவு 12 மணிக்கு கிருஷ்ணஜெயந்தி உற்சவமும் தாலாட்டும் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுவாமி திருவடிநிலைக்குப் புறப்பட்டு முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். திங்கட்கிழமை பகல் சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறும்.

***

யாழ்ப்பாணம்,ஓக.26

ஏழாலை அருள்மிகு சிவபூதராயர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. தினமும் மாலை 6 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகள் என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (3-204)

***

யாழ்ப்பாணம்,ஓக.26

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதர்ஸன ஹோமம் நடைபெறவுள்ளது.

ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்வில் மகாவிஷ்ணுவுக்கு ஹோமம் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். (எ-204)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்

1. கலைமாணி பகுதி - II - 2002
2. நுண்கலை மாணி (சங்கீதம்) - 2001
(முதலாம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் வருட பரீட்சைகள்)
3. நுண்கலை மாணி (பரதநாட்டியம்) - 2001
(முதலாம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் வருட பரீட்சைகள்)

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவிரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/=இற்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரி இடப்பட்ட ரூபா 16.50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப்பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 30.09.2005 ஆகும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு: புதிய பரீட்சைக் கட்டண விவரம்**

முதல் முறை பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா.1600/= மீள் பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா.200 /=

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

*பதிவாளர்.*
*25.08.2005*

(ச/44788) (11-19-24)



## சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

## நூற்றாண்டு நிறைவுப் பெருவிழா 2005
**1904 - 2004**

காலம்:
26.08.2005 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி

இடம்:
கல்லூரி சுப்பிரமணியம் திறந்தவெளி அரங்கு

தலைவர்
**திரு.அ.கயிலாயபிள்ளை**
(கல்லூரி முதல்வர்)

பிரதம அதிதி:
**திரு.க.கணேஸ்**
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு அதிதி:
**திருமதி றெஜினா இருதயநாதன்**
(கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்)
**திரு.எஸ்.ஸ்ரீநிவாசன்**
(பிரதேச செயலர் - தென்மராட்சி)
**கௌரவ ந.இரவிராஜ்**
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- கல்லூரிக் கொடியேற்றல்
- நூற்றாண்டு நினைவுக்கல் திரைநீக்கம்
- இறைவணக்கம்
- வரவேற்புரை - திரு.க.பத்மகாந்தன் (பிரதி அதிபர்)
- தலைமையுரை திரு.அ.கயிலாயபிள்ளை (கல்லூரி முதல்வர்)
- நூற்றாண்டுக் கீதம்
**திரு.பொன்.ஸ்ரீவாமதேவன்** (இசை ஆசிரியர்)
- சிறப்பு அதிதி உரை
**திருமதி றெஜினா இருதயநாதன்** (வலயக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)
**திரு.எஸ்.ஸ்ரீநிவாசன்** (பிரதேச செயலர் - தென்மராட்சி)
- **கௌரவ ந.இரவிராஜ்** (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
- பிரதம அதிதி உரை:
**திரு.க.கணேஸ்** (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

**நூற்றாண்டு சிறப்புமலர் வெளியீடு - இதழாசிரியர்**

- முதற்பிரதி பெறுபவர்
**திரு.பூ.வெற்றிவேலு** (முன்னாள் அதிபர், சா.இ.கல்லூரி)

**நூற்றாண்டு சிறப்புமலர் வெளியீட்டுரை:**

- **பேராசிரியர் அ.சண்முகதாஸ்** (பணிப்பாளர், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

### கலை நிகழ்ச்சிகள்

- புஸ்பாஞ்சலி
- மெல்லிசைப் பாடல்
- Group Song
- கிராமிய நடனம்
- English Poem
- கிராமியப் பாடல்
- நாட்டிய நாடகம்
- நாடகம்

**நன்றியுரை**
**திரு.யோ.ஜெயக்குமார்**
(செயலாளர், நூற்றாண்டு விழாச்சபை)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
நூற்றாண்டு விழாச் சபை,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

(ச/44783)(24-11-19)





# 22 ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 11 - 04 - 1936

மறைவு 26 - 08 - 1983



## திருமதி
## தியாகராசா-மாணிக்கம்

(சின்னாலடி காரைநகர்)

கருவாய் சுமந்து
உயிராய் வளர்த்து
அவையோர் அவையில்
சரியாசனம் இருக்க வைத்த அம்மா !
அஞ்சலிகள் ! ஆசி தாருங்கள் !


ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2813

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2024,
021 222 2025

Eswarran Trading Co.
Jaffna - Killinochchi - Colombo
Transport Services
No. 201 B, DAM STREET, COLOMBO-12
T.P: 0114714312

S.T. பரமேஸ்வரன் அன் கம்பனி
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5504


பிரிவால் கலங்கி நிற்கும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குறிப்பு: அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை (கார்த்திகைத் திருவிழா). நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பர்கள், அடியார்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat (Sri Lanka)**

Foundation level, Intermediate level & Final

Exam :- Jan. 2006 ஆரம்பம்: 20.08.2005 (Saturday)

Foundation 8.30 a.m.

Intermediate 10.30 a.m.

Final 9.30 a.m.

Medium :- English & Tamil

(வார நாள் வகுப்புகள், வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன)

Further Details

Director

Jaffna College Undergraduate Dept.

464, Hospital Road

(Near Commercial Bank),

Jaffna.

T.P.No. 0212223382

(சி/44727)(21-11-19-24)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 03 - 09 - 1951 |  | 05 - 09 - 2004 |

அமரர் **கதிரவேலு குகதாசன்**

(நல்லூர் பிரதேச செயலக ஊழியர்)

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
புன்னகை தவழும் உங்கள் மதிமுகம் இன்னமும்
எங்கள் கண்களில் தெரிகின்றதே– அப்பா.

உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்.

20, பாரதி வீதி,
கச்சேரி.

- குடும்பத்தினர்.

(39270)(21-19-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 08 - 08 - 1927 |  | 06 - 09 - 2004 |

அமரர் **ஆறுமுகம் நல்லநாயகம்** (செட்டி)

திதி: 26.08.2005

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே எம்மை பண்போடும்
பாசத்தோடும் வாழ வைத்த அன்புத் தெய்வமே!
எம்மைவிட்டு அகன்று ஆண்டு ஒன்று உருண்டோடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளில் இருந்து மீள முடியாமல் தவிர்த்து
நிற்கின்றோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இல.06, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(39174)(21-19-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 - 07 - 1928 |  | 28 - 07 - 2005 |

*திருமதி* **வினாசித்தம்பி பார்வதிப்பிள்ளை**

நாளை (27.08.2005) சனிக்கிழமை ஊறெனி தீர்த்தக் கடற்கரைமடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**வி.விஷ்ணு** (மகன்).

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(39221)(21.11.19.39)

## கிருஷ்ண ஜயந்தி விழா

யாழ்ப்பாணம்,ஓக.26

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஸ்ரீமத் பகவத்கீதா ஹோமமும் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி திருவிழாவும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

காலை 7 மணி தொடக்கம் கணபதி வழிபாடு, புண்ணியாக வாசனம், யாகபூசை போன்றன இடம்பெற்று மாலை 4 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதா ஹோமம் நடைபெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு ஜனன பூசை திருத்தாலாட்டு போன்ற பூசைகள் இடம்பெற்று அடியார்களுக்கு கிருஷ்ணஜயந்தி காயம் வழங்கப்படும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு உறியடி திருவிழா நடைபெறும். (203)

## விழிப்புலனற்றோர் சங்கம் அங்கத்தவர் பதிவு குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.26

இதுவரை விழிப்புலனற்றோர் சங்கத்தில் அங்கத்தவராக பதிவுகளை மேற்கொள்ளாதவர்களை தமது பதிவுகளை செப்ரெம்பர் மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் மேற்கொள்ளுமாறு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் பார்வையற்றவர்களிற்கான பல நலன்புரித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

எமது பிரதேசத்தில் பார்வையற்ற பலர் எவ்வித வசதி வாய்ப்புகளையும் பெறாது வீடுகளில் முடங்கிப்போய் உள்ளனர். இவர்கள் தமக்கான வாழ்வாதாரங்களைப் பெற்று வளமடைய யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் வழிகாட்டுகிறது.

இதுவரை இந்தச் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தமது விவரங்களைப் பதிவு செய்து நலன்களை அடைய வேண்டும் - என்றுள்ளது. (எ-204)

## வலந்தலையில் மீன்சந்தை திறப்பு

ஊர்காவற்றுறை,ஓக.26

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் வடக்கு உபஅலுவலக எல்லைப் பரப்பில் வதியும் பொதுமக்களின் நலன் கருதி சுமார் எட்டுலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவில் வலந்தப் பகுதியில் புதிய மீன் சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி 'நிக்கொட்' நிறுவனத்தால் வழங்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார்.

இந்த மீன்சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பொதுமக்களின் பாவனைக்கு யாழ். செயலக நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப்' பணிப்பாளர் கே.நவரெத்தினராஜாவால் திறந்து வைக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (3-16)

## நீர் நிலைகள் வற்றியதால் தீவக மக்களுக்குச் சிரமம்

ஊர்காவற்றுறை , ஓக.26

தற்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாக தீவுப் பகுதியெங்கும் பொது மக்கள் அன்றாட தேவைக்குக்கூட நீரைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

பல இடங்களில் குளங்களில் நீர் வற்றி வறண்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் கால்நடைகள் பல குடிதண்ணீர் இன்றி இறந்து போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை - சாட்டி மற்றும் அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகக் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் இந்த வரட்சி நிலை நீடிக்கும் பட்சத்தில் பாதிக்கப்படலாம் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இப் பிரதேசங்களில் கிணறுகள் முற்றாக வற்றிவிட்ட நிலையில் பொதுமக்கள் அவற்றை ஆழமாக்கும் பணியில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (எ- 16)

## ஆங்கிலக் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஓக.26

பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலைகளின் ஆங்கில கலைவிழாவும் ஆங்கில தின விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் மேற்படி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-13)


## சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்

## தாதியர் பயிற்சி - ஆள்சேர்ப்பு

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து (விவாகமாகாத) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மொத்த எண்ணிக்கையில் 5% ஆண்களாவர்.

**1.கல்வித் தகைமைகள்:**

அ) க.பொ.த.உயர்தரம் விஞ்ஞானம் 3 பாடங்களில் சித்தி. பரீட்சை 2000, 2001, 2002,2003 இல் தோற்றியிருக்கவேண்டும்.

ஆ) க.பொ.த.(சாதாரணதரப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் உட்பட 04 (நான்கு) பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 (ஆறு) பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**2. ஏனைய தகைமைகள்:**

அ) வயது, 19.09.2005 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆ) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருக்க வேண்டும்.

இ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

ஈ) நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும்.

உ) நல்ல சுகதேகி

ஊ) வதிவிடச் சான்றிதழ் (3 ஆண்டுகள்) வாக்காளர் பட்டியல் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவிடத்துப் பெற்றோரின் வாக்காளர் பட்டியலின் பிரதியுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

மாதிரி விண்ணப்பப்படிவங்களைச் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் பிரதி மாகாண சுகாதாரப்பணிமனை, யாழ்ப்பாணத்திலும் பார்வையிடலாம். விண்ணப்பப்படிவங்களை 8 ½ x 13½ அங்குல அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆள் சேர்த்துக் கொள்ளல்'** எனக் குறிப்பிடல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**பணிப்பாளர் (நிர்வாகம் 701, சுகாதார பராமரிப்பு, போசனை ஊவா வெல்லஸ் அபிவிருத்தி அமைச்சு "சுவசிரியாய" 385, வனபத்தேகம விமலவன்சதேரர் மாவத்தை, கொழும்பு - 10** "இற்குப் பதிவுத்தபாலில் 2005.09.19இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**4. பயிற்சித் திட்டம்** - 03 ஆண்டுகள்

(அக்காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்).

மேலதிக விவரங்களுக்கு பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளலாம். இது பற்றிய முழு விவரமும் 08.08.2005 ஆம் திகதி வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

*பிரதி மாகாணப் பணிப்பாளர்,*
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

வைத்தியகலாநிதி **சி.எஸ்.சொலமன்**
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர், தாய்சேய் நல வைத்திய அதிகாரி,
சுகாதார சேவைகள் - யாழ்ப்பாணம். (சி-44771)(21-11-19)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 - 06 - 1930 |  | 30 - 07 - 2005 |

திருமதி

**கோபாலகிருஷ்ணன் ஆச்சிமுத்து**

*30.07.2005 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (27.08.2005) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் (29.08.2005) திங்கட்கிழமை நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.23, புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

(39232)(42-21-19-11)

## முக்கிய கலந்துரையாடல்

*1994 ஆம் ஆண்டில் பட்டதாரிப் பயிலுநர்களாக பிரதேச செயலகங்களில் பணிபுரிந்து ஆசிரிய நியமனம் கிடைத்தவர்களிற்கான பயிற்சிக் காலம் தொடர்பான கலந்துரையாடல்.*

**இடம்:-** *கற்சுமி கல்வி நிறுவனம்*
*166, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**காலம்:** *27.08.2005 (சனி) முற்பகல் 11 மணி*

**குறிப்பு:** *சகல ஆவணங்களுடனும் சமுகம் தரவும்*

**தகவல் :**
**வி.சிவனேசன்.**
**தொ.பே.:0776510149**

*(39299)(32-25-13-34)*

## சிறுநீரகம் தேவை

31 வயது நிரம்பிய A+ குருதிவகையை உடைய பெண்மணி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

A+ குருதி வகையை உடைய அல்லது 0+ குருதி வகையை உடைய கொடையாளியிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 0777 632754
0777 513296

(39315) (25-13-34)

## இதய அஞ்சலிகள்



எமது நண்பர்

**பசுபதி வசந்தநாதன்**

(சகோதரம்)

(உரும்பிராய்மேற்கு)

அவர்கள் 23.08.2005 செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

**சி.சிவராஜன் -**
*திருநெல்வேலி,* (39312) (25-13-34) **கணேஸ் அண்ணை**
*நவீன சந்தை உட்புறம்.* **களஞ்சியம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் தொண்டர்
ஆசிரியராகக் கடமையாற்றும்
**திரு.சண்முகம் சண்முகலிங்கத்தின்**
பாசமிகு தாயார் நுணாவில் மேற்கை
வசிப்பிடமாகக்கொண்ட
**அமரர்**
**திருமதி சண்முகம் பசுவதி**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க.பா. அதிபர், ஆசிரியர்கள்,
நீர்வேலி. (39303) (25-13-34) முகாமைத்துவ உதவியாளர்,மாணவர்கள்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு*
*15 . 12 . 1973*



*உதிர்வு*
*26 . 08 . 1997*

## இராசேந்திரம் மைதிலி
## கப்டன் கோகிலா
*(மாலதி படையணி)*

*பாசத்தின் உருவே! மைதிலி!*
*தேசத்தில் நேசம் கொண்டாய்*
*நாசம் செய் பகை யழித்து*
*நடுகல்லில் உறங்கு கின்றாய்*
*விசிடும் தென்றலாய் உன்நினைவு*
*விலகாது என்றும் எம்மிடமே!*

**குடும்பத்தினர்**
சுன்னாகம் தெற்கு, **தகவல்: இ.முரளீதரன்**
சுன்னாகம். (39306)(25-13-34) **(பிரான்ஸ்).**

### உள்ளூராட்சி விழா: முன்னேற்பாட்டுக் கூட்டம்

வேலணைப் பிரதேச சபையினால் இவ்வாண்டு நடத்தப்படவுள்ள உள்ளூராட்சி விழா தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்குப் பிரதேச சபை மண்டபத்தில் செயலாளர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

### யெகோவாவின் மாநாடு இன்று

யெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 தினங்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கடவுளுக்கு கீழ்ப்படிதல்', 'கடவுளின் வாக்குக்கு செவிகொடுங்கள்'போன்ற தலைப்புகளில் விசேட நிகழ்வுகள் நடைபெறும். (204)

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை**

நெடுந்தீவு மேற்கு, 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் 24.08.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் நண்பகல் ஒரு மணிக்கு நெடுந்தீவு மேற்கு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள்குமார் (மகன்),
கனகம்மா (மனைவி),
திருமதி சாரதாதேவி கணபதிப்பிள்ளை (மகள்).

*3 ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவுமேற்கு.* (சி-44792)(25-13-34)


**KARAN'S ACADEMY ACHCHELU.**

SPOKEN ENGLISH WITH
**GRAMMAR**
FROM:- A,B,C...
**By.S.M.PERABHAKARAN.**
START ON:- 03.09.2005
SATURDAY
AT.4.00 P.M
(39288) **DIRECTOR.**

**ராஜா** யாழ்ப்பாணம்
*இன்று முதல் சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த*
**உள்ளம் கேட்குமே**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-43390)

**மனோகரா** யாழ்ப்பாணம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
**அந்நியன்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(பு.நே.)
(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்** (நீலம்)
காட்சிகள்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே).
(கடைசி வாரம்)
(சி-41187)

**நாதன்ஸ் சினிமா**
சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்
**இங்கிலீஸ்காரன்**
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(சி-43363)


## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**17 ஆவது ஆண்டு**



**அமரர் கணபதி தியாகேசு**
(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன மின்பகுதி உயர் உத்தியோகத்தர்)

**5 ஆவது ஆண்டு**



**திருமதி**
**தியாகேசு அன்னம்மா**

| | | |
|---|---|---|
| *07.01.1931* | *பிறப்பு* | *05.11.1935* |
| *31.08.1988* | *இறப்பு* | *21.08.2000* |

எங்களது அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய!! இறைவனை வேண்டுகின்றோம்.

*ஆதியாமலை, உடுப்பிட்டி.* (39309) (25-13-34) - **பிள்ளைகள்.**

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## மீள் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 18.07.2005 ஆம் திகதி இப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிட்ட வேலைக்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை 02.09.2005 திகதி நண்பகல் 12 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் 9) பதிவு செய்தவர்கள் கீழே குறித்த தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் 06.09.2005 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கிடையில் சபையின் தலைமை அலுவலகத்தில் கிடைக்கச்செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும். கேள்விகள் 06.09.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதிசேர்வரி |
|---|---|---|---|
| குழாய்க் கிணறு அமைத்தல், தேவரையாழி, வதிரி. | 1000.00 | 500.00 | 75.00 |

*சி.வே.குலநாயகம், செயலாளர்*
(சி-44787) (25-13-34) *வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.*

## வணங்குகிறேன்



*அறிவு தந்து அவைதனில் அரங்கேற்றி*
*அவனியில் சிறக்கவைத்த*
*ஆசிரியப் பெருந்தகைக்கு*
*இதய அஞ்சலிகள்.*

**மூதறிஞர்**
**க.சிவராமலிங்கம்பிள்ளை** - ஆறு.திருமுருகன்

## மரண அறிவித்தல்கள்

### *பசுபதி வசந்தநாதன்*



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி வசந்தநாதன் 23.08.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி -மலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மூத்து நல்லம்மாவின் மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் ஜீவகன் , தாட்சாயினி (அமரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தாதேவி, ரவீந்திரநாதன், ரதிதேவி, விஜயகுமார், சுகுமார் (ஜேர்மனி), றஜித்தா (சுவிஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(26.08.2005) வெள்ளிக்கிழமை பி.ப.2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய விதானையார் ஒழுங்கை,*
*உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.* தகவல்
*T.P:077 6176368* (39298) (25-13-34) **குடும்பத்தினர்.**

### இளையதம்பி செல்லத்துரை

*(சின்னராசா - மான்ஸ் பாடசாலை வீதி,உடுவில்)*



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்லத்துரை அவர்கள் 25.08.2005 வியாழக்கிழமை பி.ப.4 மணியளவில் இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை பி.ப.4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உடுவில் பூவோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உடுவில்.* (39317) (25-13-34) **குடும்பத்தினர்.**

### பேதுறுப்பிள்ளை அகஸ்ரீன்பிள்ளை

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறுப்பிள்ளை அகஸ்ரீன்பிள்ளை நேற்று (25.08.2005) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2005) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பேதுறுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39318) (25-13-34) தகவல்:
*புலோப்பளை கிழக்கு,பளை.* **குடும்பத்தினர்.**

# எதிர்காலத்தில் தழிழ்மொழிமூல கல்வித்துறை எந்தவித பாரபட்சங்களுக்கும் உள்ளாகாது

## ஜனாதிபதி சந்திரிகா உறுதி!

காரைதீவு,ஓக.26

எதிர்காலத்தில் நாட்டின் தழிழ்மொழி மூல கல்வித்துறை எந்தவித பாரபட்சங்களுக்கும் உள்ளாகமாட்டாது

என்று வடக்கு-கிழக்கு கல்வித்துறை பற்றிய மாநாட்டில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித் தார். வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளை ஆராயும் மாநாடு நேற்று வியாழக்கிழமை கொழும்பு ஜனாதி பதி செயலகத்தில் நடைபெற்றது.

மாநாட்டில் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தன,மேலதிக செயலர் தில்லைநடராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.சுகயீனம் காரணமாக கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் கலந்துகொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கின் தழிழ,முஸ்லிம் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணக் கல்விச் செயலாளர் இ.தியாகலிங்கம்,பிரதம செயலாளர் ரி.ரங்கராஜா, 'நிக் கொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கல்விச் சேவை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

•இலங்கை கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்ப அடுத்தவாரம் வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும்-

தழிழ் மொழிமூல வெற்றிடங்களுக்கு தனியாக தழிழ் மொழிமூல பரீட்சார்த்திகள் மாத்திரமே விண்ணப்பிக்கக் கூடியவாறு ஏற்பாடுசெய்யப்படுமெனவும் ஜனாதிபதி அப்போது உறுதியளித்தார்.

இந்த மாநாட்டிற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அழைக்கப்படவில்லை. (ஒ-84)

## இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளம், 3ஆம் ஒழுங்கைப் பகுதியில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டின் ஜன்னல் வழியாக இனந்தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிவிட்டனர் என்று பெலீஸார் கூறினர். (க)

## பேச்சுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்த ஒப்பந்தம் பற்றி மட்டுமே இப்போது பேசப்படவுள்ளதால் அந்தப் பேச்சுகளை இலங்கையில் நடத்துவதற்கு அரசாங்கம் விரும்புகின்றது எனவும்-

அரசின் இந்த யோசனை நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டதாகவும்- அமைச்சர் சொன்னார். (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர்.

பேச்சுகளில் கலந்துகொள்ளும் தமது உயர் மட்ட உறுப்பினர்களைக் கருத்திற் கொண்டு சூனியப் பிரதேசத்தில் சந்திப்பை நடத்த புலிகள் மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

இதுதொடர்பாக நோர்வே ஊடாக அரசு சமர்ப்பித்த யோசனைகளை மறுத்துள்ள புலிகள் மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில், பேச்சுகள் இலங்கையில் நடைபெறுவதானால் அது புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் இடம்பெறும் சாத்தியமே அதிகம் உள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து அரசு - புலிகள் இரு தரப்புகளுமே மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றன என்று நம்பகமாகத் தெரிகின்றன. எனினும், இதுதொடர்பான இறுதி முடிவு எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. நோர்வே அனுசரணையாளர்கள் இந்த விடயத்தில் தொடர்ந்தும் வேகமாகப் பணியாற்றி வருகின்றார்கள். (க)

## ரவைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழியில் பொதியுடன் நின்றிருந்த இளைஞர் ஒருவரை தாம் சோதனையிட முயன்றனர் என்றும்- அந்த இளைஞர் பொதியைக் கைவிட்டு உடனடியாகத் தப்பிச் சென்றுவிட்டார் என்றும்-

பொதியைச் சோதித்தபோது அதற்குள் 900 ரவைகளும், இரு கிரனேட்டுகளும் இருக் கக் கண்டுபிடிக்கப்பட்டன என்றும்- பொலீஸார் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா, ஹட்டன் பொலீ ஸார் குறிப்பிட்ட தோட்டப் பகுதியில் தீவிர தேடுதலை நடத்தினர். பெருமளவில் ரவைகள் மலையகத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதற் தடவையெனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (க)

## இலங்கையிலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரர் நேற்றுமுன்தினம் வினா எழுப்பியிருந்தார். அதற்கு அரசு சார்பாக, சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் பதிலளித்தார். அரசின் நிலைப்பாட்டை விளக்கி அவர் விடுத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

புலிகள் சமாதானப் பேச்சுகளை ஒஸ்லோ நகரில் நடத்தவேண்டும் எனக் கோரியுள்ளனர். ஆனால், பேச்சுகள் இலங்கையில் இடம் பெற வேண்டும் என்றே அரசு விரும்புகிறது. இந்தவிடயம் தொடர்பாக நாம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகக் கலந்துரையாடி வருகிறோம். பேச்சுகள் நடைபெறும் இடத்தையும் திகதியையும் விரைவில் அறிவிப்போம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அர்ப்பணிப்புடன் கடைபிடிக்க அரசு தீர்மானித்துள்ளது. புலிகளுடன் பேசி உரிய தீர்வொன்றைக் காண வேண்டும் என்பதே அரசின் நோக்கம். அதில் எவ்வித மாற்றமும் இல்லை.- என்றார். இலங்கையில் பேச்சு நடத்துவது குறித்து புலிகளிடமிருந்து எவ்வித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.- என்றார் அவர். (க-12)

## பேராசான் சிவராமலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர் உயர் கல்வியை 1941ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரியில் கற்றார். யாழ்.இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வராக விளங்கிய இவர், 1943 ஆம் ஆண்டில் அங்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அன்றிலிருந்து நாற்பது வருடங்கள் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் உப அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றார்.

1946 ஆம் ஆண்டு சென்னை அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

இவரது வாழ்வில்.......

* அகில இலங்கை சேக்கிழார் மன்ற ஸ்தாபகர் கால உறுப்பினராக இருந்து இந்திய அறிஞர்களை அழைத்து யாழ்.இந்துக் கல்லூரியில் சேக்கிழார் விழாவை நடத்தினார்.
* 1980 ஆம் ஆண்டு அகில இலங்கை கம்பன் கழகத்தை ஸ்தாபித்து அதன் காப்பாளராக இருந்து வழிநடத்தினார்.
* இந்தியப் பேரறிஞர் தே.பொ. மீனாட்சி சுந்தரத்தின் மாணவனான இவர் இந்தியாவில் நடந்த தமிழ் விழாக்களில் பங்கு பற்றி உரையாற்றியுள்ளார்.
* தர்மபுர ஆதீனம் 1970களில் இவரைக் கௌரவித்து விருது வழங்கியது.
* அகில இலங்கை கம்பன் கழகம் இவருக்கு 'கம்பு காவலர்' என்ற விருதை வழங்கியது.
* கடந்த வருடம் யாழ். இந்துக் கல்லூ ரியின் பழைய மாணவர்கள் இவரை லண் டனுக்கு அழைத்து பாராட்டு விழா நடத்தினார்கள்.
* கடந்த மாதம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 'மூத்த ஆசிரியப் பெருந்தகை' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியது.
* யாழ்.பல்கலைக்கழகத்தால் வழங்கப் படும் கௌரவ கலாநிதிப் பட்டத்துக்கென இந்த முறை பரிந்துரைக்கப்பட்டவர்களில் சிவராமலிங்கமும் ஒருவர்.

பேராசான் சிவராமலிங்கத்தின் இறுதிச் சடங்குகள் கந்தர்மடம் குமாரசுவாமி வீதி யில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று பி.ப.3 மணிக்கு நடைபெறும். அவரது பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். (ஐ-த)

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென கேட்டும்-

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில் தான் நடத்தப்பட வேண்டுமென்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக் கோரியும்-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன,

லிபரல் கட்சியின் சார்பில் போராசிரியர் ராஜீவ் விஜேசிங்க, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் சட்டத்தரணி கமல் நிஸங்க ஆகியோர் இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இவற்றை கடந்த திங்கட்கிழமை நடந்த விசாரணையின் போது உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, நிஸங்க உதலாகம, நிமல் திஸாநாயக்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோரை உள்ளடக்கிய 'பெஞ்ச்' இன்று தீர்ப்பை ஏகமனதாக வெளியிடு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாகக் கடந்த திங்கட்கிழமை இது பற்றிய விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் 1999 டிசம்பர் 22ஆம் திகதியே ஆரம்பமாவதாக தேர்தல் ஆணையாளரால் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் இவ் வருடம் நடைபெறுமென்று உயர் நீதிமன்றம் இன்று அறிவித்தால் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 25 ஆம் திகதிக்குட்பட்ட காலத்தில் வேட்பு மனுக்களை கோருவதற்கும், ஒக்ரோபர் 22ஆம் திகதி முதல் நவம்பர் 22ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் நடவடிக்கைகளை எடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## மரண அறிவித்தல்கள்

### சைவசிகாமணி, தமிழ்மணி, சித்தாந்தபாரதி, கம்பகாவலன் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை

[முன்னாள் பிரதி அதிபர் யாழ்.இந்துக் கல்லூரி]



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் குமாரசாமி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் நேற்று (25.08.2005) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் வைத்தியபூபதி, சித்தாந்த செம்மல் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சின்னத்தம்பர்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருஞானம், நாகபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானபூரணி (ஆசிரியை)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவமோகன் மற்றும் ஞானசம்பந்தன் (சிவாஜி - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திவ்வியபவானியின் அன்பு மாமனாரும் சிவநயனி (கலைப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்), சிவசங்கரி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் புலவர் ஈழத்து சிவானந்தன் (கனடா) காலஞ்சென்ற திருமதி பர்வதபர்த்தினி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திருலிங்கநாதன் (முன்னாள் நிர்வாக சேவை அதிகாரி), குகராஜன் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் இரத்தினம் (நாகேஸ்வரி, ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தணிகை' (39313) (13.12.25)
28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி.சி.திவ்வியபவானி
(மருமகள்).

### திருமதி நாகபூசணி அம்மா திருச்சிற்றம்பலம்ஜயா

வேலில்பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டியை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி நாகபூசணி அம்மா திருச்சிற்றம்பலம் ஐயா அவர்கள் நேற்று (25.08.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2005) சனிக் கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலில்,
வல்வெட்டித்துறை. (39323) (13.12.25)

தகவல்:
தி.விக்னேஸ்வரக்குருக்கள்
(மகன் - SDO).

### செபஸ்ரியன் சகாயம் அருள்ராஜ் (அருள்)



பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் சகாயம் அருள்ராஜ் அவர்கள் 24.08.2005 புதன்கிழமை அன்று கிறிஸ்துவுக்குள் நித் திரை அடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும்.

179/5,பாங்சால் வீதி
(யாழ்.சிறைச் சாலை முன்பாக),
யாழ்ப்பாணம் . (39322) (13.12.25)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### முத்தர் மார்க்கண்டு

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கலைநகர் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் மார்க்கண்டு அவர்கள் நேற்று (25.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.08.2005) வெள்ளிக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு. (39321) (13.12.25)

தகவல்:
அழகரட்ணம்
(மகன்- இ.போ.ச).


IIS CITY CAMPUS
181, Navalar Road, Jaffna.

BIT

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மேற்படி வெளிவாரி கற்கை நெறியின் கல்வியாண்டு 2005/2006 இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவுப்பரீட்சை மூலம் இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

இயக்குநர்.

கணக்கீடு
A/L 2006
கம்பனி
ஆரம்பம்: நாளை
8 A.M.
A/L 2007
தொங்கல் கணக்கு
ஆரம்பம்: நாளை
7A.M.
ஆசிரியர்: S. தவா
B.Com(Hons) (Acc.Spl.)
ஈசன் அக்கடமி
கோண்டாவில்.
(39308) (13.12.25)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பரிசுத்தினம் - 2005 பிற்போடப்பட்டுள்ளது

இன்று(26.08.2005)வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பரிசுத்தினம் தவிர்க்க முடியாத காரணத்தால் மறுநாள் சனிக் கிழமை (27.08.2005) முற்பகல் 9.45 மணியளவில் நடைபெறும்.

அதிபர்
யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி-44795) (13.12.25)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.